# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | பங்குனி 01 | வெள்ளிக்கிழமை (15.03.2002) | தொலைபேசி 3378 | ஒலி 86



நியூ நகுலா ஜுவல்லரி
74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




நேற்று பலாலி படைத்தளத்தை வந்தடைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விமானத்தில் இருந்து இறங்கி அமைச்சர்கள் சகிதம் வருவதை முதற் படத்திலும், தென்மராட்சியை பார்வையிடுவதை 2வது படத்திலும் நாகர்கோவில் பகுதியைப் பார்வையிடுவதையும் அருகில் அங்கு சென்ற வலம்புரி செய்தி ஆசிரியர் மு.வாமதேவன் நிற்பதையும் 3வது படத்திலும் காணலாம்.

### யுத்தத்திற்கு ஒரு போதும் இடமில்லை

# யாழ்- கண்டி வீதியை திறக்க உடன் நடவடிக்கை எடுப்பேன்

## யாழ் செயலகத்தில் பிரதமர் ரணில் உரை

(யாழ்ப்பாணம் விசேட நிருபர்)

**நீண்டகால யுத்தத்தினால் அழிந்து போயுள்ள யாழ்ப்பாணத்தை மீண்டும் கட்டியெழுப்பி சகஜ வாழ்க்கையை உருவாக்க வேண்டும். இனி வருங்காலத்தில் நாட்டில் யுத்தம் ஏற்படுவதற்கு இடம் கொடுக்கப் போவதில்லை.**

**சமாதானத்திற்காக என்னவிலை கொடுக்கவும் தயார். விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை முறிந்து போவதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டேன் என்று யாழ் செயலகத்தில் இடம் பெற்ற மாநாட்டில் பிரதமர் உறுதிபடத் தெரிவித்தார்.**

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா யாழ் செயலகத்தில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்ற இம் மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ, புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனா, இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அ. விநாயகமூர்த்தி, வி. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம் ஆகியோருடன் படை அதிகாரிகளும் அமைச்சின் செயலாளர்களும் கலந்து கொண்டனர். பிரதமர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கடந்த பல ஆண்டுகளாக எமது நாடு பல பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது. இதனால் வடக்குக் கிழக்குப் பகுதிமக்கள்

(10ம் பக்கம் பார்க்க)



யாழ் செயலக மாநாட்டில் பிரதமர் முன்னிலையில் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் உரையாற்றுகிறார்.

## யாழ் வந்த பிரதமர் ரணில் தென்மராட்சிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு பலாலி விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான சி.ஆர் 880 விமானத்தில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவும், பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவும், கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷவும் மற்றும் அமைச்சின் செயலாளர்களும் வந்திருந்தனர்.

விமான நிலையத்தில் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனா இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான வி. ஆனந்தசங்கரி யாழ் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் அ. ஜெயரத்தினம் ரான் தலைவர் என். வாமதேவன் கணக்காளர் என். குமரதாசன் ஆகியோர் பிரதமரை வரவேற்றனர்.

பலாலி விமானப்படைத்தளத்தில் முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்

(10ம் பக்கம் பார்க்க)

## மாலை அணிய பிரதமர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விமானத்தளத்திலோ, அவர் விஜயம் செய்த இடங்களிலோ மாலை மரியாதை வரவேற்பை

(10ம் பக்கம் பார்க்க)



நல்லூர் பதிக்குச் சென்ற பிரதமரை பொதுமக்கள் புடைசூழ்ந்து நிற்கும் காட்சி

## நல்லை ஆதீனத்திற்கு பிரதமர் செல்லவில்லை

### இந்து மதத்தை அவமதித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த பிரதமர் நல்லை ஆதீனத்திற்குச் செல்லாமல் இந்து மதத்தை அவமதிப்புச் செய்தார். பிரதமரின் யாழ்ப்பாண விஜயத்தின் போது

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 21-வது பட்டமளிப்பு விழா நாளை

## 734 பேர் பட்டம் பெறுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழகத்தின் 21ஆவது பட்டமளிப்பு விழா நாளை சனிக்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

ஐந்து அமர்வுகளில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் 734பேர் பட்டம் பெறவுள்ளனர்.

காலை 9மணிக்கு முதலாவது அமர்வும், காலை10.30 மணிக்கு இரண்டாவது அமர்வும். முற்பகல் 11.30 மணிக்கு மூன்றாவது அமர்வும், நண்பகல் 1.30மணிக்கு நான்காவது அமர்வும், மாலை 3 மணிக்கு இறுதி அமர்வும் நடைபெறவுள்ளது.

59 பட்டப்பின்படிப்பு பட்டதாரிகள் பட்டம் பெறும் அதேவேளை, முதுதத்துவ மாணிப்பட்டம் ஒருவரும் முதுமெய்யியல் மாணிப் பட்டம் 12 பேரும், முதுகல்வியியல் மாணிப்பட்டம்46பேரும், தொழில் நிர்வாகமாணிப்பட்டம் 79 பேரும், விவசாயவிஞ்ஞானமாணிப் பட்டம் 29பேரும், வர்த்தகமாணிப்பட்டம் 65 பேரும், கலைமாணிப்பட்டம் 259 பேரும் மருத்துவமாணிப்பட்டம் 57 பேரும் பெறவுள்ளனர்.

அத்துடன் இசைக்கலைமாணிப் பட்டமும் வழங்கப்படவுள்ளதுடன் வெளிவாரி பட்டதாரிகளும் பட்டம் பெறவுள்ளனர்.

இதேவேளை இலக்கியத் துறையில் ஆற்றும் சேவையை கௌரவித்து கௌரவ கலாநிதிப்பட்டம் வித்துவான் க. சொக்கலிங்கம் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது(இ)

### வேலணையில் பாலஸ்தாபனம்

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி மத்தியமகாவித்தியாலயத்தில் உள்ள நடராஜர் ஆலயத்தின் பாலஸ்தாபனம் இன்று காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-75)

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப்பிரதேச சிறுவர் பாதுகாப்பு கண்காணிப்புக் குழுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம்தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-75)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தொழிற் திணைக்களம் மகளிர் அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்துதொழிற் கல்வி-தொழிலாளர் நலச் சட்டங்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை நாளை காலை 9 மணிக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடத்தவுள்ளது.

கருத்தரங்கில் டாக்டர் ஜி பவானி குடும்ப சுகாதாரம் தொடர்பான கருத்துக்களையும்,சட்டத்தரணி வி.ரி சிவலிங்கம் தொழிலாளர் நல சட்டங்கள் தொடர்பாகவும், உதவி தொழில் ஆணையாளர் ஆர். தர்மலிங்கம் 'பெண்கள் தொடர்பான சட்டங்கள், பற்றியும் சிரேஷ்ட தொழில் அலுவலர் எஸ். முத்துக்குமாரசாமி சமூக பாதுகாப்பு சட்டங்கள் தொடர்பாகவும், சரோஜா சிவசந்திரன் முறைசாரா தொழில்லீடுபட்டுள்ளபெண்களை ஒழுங்கமைப்பு செய்தல் தொடர்பாகவும் உரையாற்றவுள்ளனர் (உ)

# பெண்ணுரிமைப் பாதுகாப்பு சட்டத்தை அமுலாக்கக் கோரி பிரதமருக்கு கடிதம்

## புதுமைப் பெண்கள் அமைப்பு அனுப்பிவைப்பு

(மந்திகை)

பெண்ணுரிமையைப் பாதுகாக்கவும் பெண்கள் மீது புரியப்படும் அனைத்துவிதக் குற்றங்களைத் தடுக்கவும் அவசியமான விதிகளைக் கொண்ட 'பெண்ணுரிமைப் பாதுகாப்புச் சட்டம்' இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.

கரவெட்டியில் இயங்கும் 'புதுமைப் பெண்கள் அமைப்பு' சர்வதேச மகளிர் தினமான கடந்த 8 ஆம் திகதி கொள்கைத் திட்டமிடல் திட்ட அமுலாக்கல் அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, புதிதாகப் பதவியேற்றுள்ள ஆட்சியாளரின் 100 நாள் சமூக, பொருளாதார துரித அபிவிருத்தித் திட்டத்தை முழுமனதுடன் நாம் பாராட்டி வரவேற்கின்றோம். இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளவென நம்பிக்கையுடன் நாமும் சில வரும் கோரிக்கைகளைத் தங்களிடம் சமர்ப்பிக்கின்றோம்.

★ நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு வழக்குகளின் விசாரணையைத் துரிதமாக்கி,குற்றவாளிகள் இனங்காணப்பட்டுக் கடுமையாகத் தண்டிக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்.

★ தகுந்த ஆதாரமின்றி வீண்சந்தேகத்தின் பேரில் இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்கள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும்.

★ மகப்பேறு,குழந்தை மற்றும் வயோதிபர் பராமரிப்பு உட்பட மகளிர் விவகாரம் அனைத்திலும் ஆலோசனை வழங்கி அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவென கிராம அலுவலர் பிரிவு தோறும் பயிற்றப்பட்ட 'மகளிர் விவகாரத் தொண்டர்கள்' நியமிக்கப்படவேண்டும்.

★ குடும்பவறுமை காரணமாக பசியோடு பாடசாலைக்கு வந்து போகும் மாணவர் தொகை பல இலட்சமாகப் பெருகிவிட்டதால் மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும்விதமாக பாடசாலைகளில் இலவச சத்துணவு வழங்கப்படவேண்டும்.

மேற்படி கோரிக்கைகளின் வெற்றிக்காகத் தங்களுடன் ஒத்துழைக்கவும் ஆலோசனை கலக்கவும் தொடர்ந்து பங்களிக்கவும் நாம் தயாராகவேயுள்ளோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-23)

## தேர்தல் தொடர்பான பயிற்சி வகுப்பும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கடமையாற்றும் சிரேஷ்ட தலைமைதாங்கும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று காலை 9.30 மணி முதல் யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கலந்துரையாடல் நாளை செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (உ-19)

### வெளியீட்டு விழா

மூதறிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரையின் கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், ஆசியுரையை நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி களும், வெளியீட்டுரையை கவிஞர் கல்வயல் வே. குமாரசாமியும், ஆய்வுரையை கவிஞர் சோ. பத்மநாதனும் நிகழ்த்தவுள்ளனர். சிறப்புரைகளை குகஸ்ரீ க. சொக்கலிங்கம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா, ஆ. இராஜகோபால் இ. த. ஆ. ச. சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

## மத்திய கல்லூரியில் திரைக்கலைச் சங்கம் இன்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

1895 மார்ச் 15ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் ஆரம்பமான சினிமாவின் 107வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக சலனசித்திரம் யாழ்ப்பாணம் அமைப்பின் ஆதரவுடன் யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் இன்று பிற்பகல் 1. 30மணிக்கு கருத்தரங் ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த வகையில் பாடசாலைமட்டத்தில் தரமானஇரசனையை வளர்க்கும் நோக்குடன் கருத்தரங்கின் முடிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் திரைக்கலைச் சங்கம் ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது (உ)

## நல்லை ஆதீனத்தில் இன்று சமாதானத் தியானம்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனத்தில் இன்று நண்பகல் 1மணிக்கு சமாதானத்துக்கான தியானம் இடம்பெறவுள்ளது.

யாழ்மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள சமாதானத் தியானத்தில் யாழ்மாவட்ட மனிதநேய அமைப்புக்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள்,சர்வமதக் குழுவினர்,கல்விசார் அமைப்புக்கள் என்பன கலந்துகொள்ளவுள்ளன.

இத்தியான நிகழ்வில்பொது மக்களையும் இணைந்து கொள்ளுமாறு மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் அ.கி.சிவசுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)


### அதிபர்பதவிக்கு வெற்றிடம்

கீழ்க்காணும் பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு யாழ் வலயத்திற்குட்பட்ட அதிபர் தரம் 1, அதிபர் தரம் 2;1, அதிபர் தரம் 2;11 தராதரமுடைய அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை 21-03-2002 இற்கு முன்னர் யாழ் வலயக்கல்வி அலுவலகத்தில் நேரடியாகக் கையளிக்கலாம்.

| பாடசாலை | பாடசாலை தரம் |
|---|---|
| 1. யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி | 11 |
| 2. யாழ். நல்லூர் ஆனந்த வித்தியாலயம் | 111 |
| 3. யாழ். அத்தியார் இந்துக்கல்லூரி | 1சி |
| 4. யாழ். கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தி | 111 |
| 5. யாழ். நீர்வேலி றோ. க. த. பாடசாலை | 111 |
| 6. யாழ். கோப்பாய் தெற்கு றோ.க. வித்தி | 111 |

திருமதி. செ. மகாலிங்கம்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(கி-3711)


# இராணுவ ஆள்சேர்ப்பு நிலைய கழிவு நீர் தொட்டியினுள் வீழ்ந்து 21 இளைஞர்கள் உயிரிழப்பு

(லக்னோ)

உத்தரப்பிரதேஷ் மாநிலத்தின் தலைநகர் லக்னோவில் இராணுவ தலைமையகத்தின் ஆள்சேர்ப்பு நிலையத்தில் உள்ள கழிவு நீர்த் தொட்டியினுள் வீழ்ந்து 21 இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

இராணுவ தலைமையகத் தின்மைதானத்தில்இருந்தகழிவு நீர் தொட்டியின் மீது இளைஞர்கள் ஏறிநின்ற போது தொட்டியின் மூடி பாரம் தாங்காமல் உடைந்து வீழ்ந்தது.

இதனால் அதன் மேலேஏறி நின்றிருந்த இளைஞர்கள் அதற்குள் விழுந்து மூச்சுத் திணறி உயிரிழந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சன நெரிசலில் பலர் காயமடைந்தனர். இச்சம்பவங்களை அடுத்து ஆத்திரம் கொண்ட இளைஞர்கள் அரச பேருந்துக்களையும் பல வாகனங்களையும்தீயிட்டு கொழுத்தியுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கடும்வாதங்கள் ஏற்பட்டன. சமாஜவாதிக் கட்சி உறுப்பினர்கள் மக்களவையின் மையப்பகுதிக்கும் சென்று கூச்சலிட்டதுடன்இதுகுறித்து அரசு உடனடியாக அறிக்கை ஒன்றை வெளியிடவேண்டுமென்றும் இந்த சம்பவத்தில் 50 பேர் உயிரிழந்ததாக வேறோர் செய்தி தெரிவித்துள்ளது. (உ-5)

### அறநெறிப் பாடசாலை

(ஆனைக்கோட்டை)

சாவல்கட்டு ஜே 131 கிராம சேவகர் பிரிவில் அண்மையில் அறநெறிப் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ் அறநெறிப்பாடசாலை வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் அந்திகுழி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்று வருகின்றன. (உ-20)

# ஆஸிக்குள் நுழைவோர் கிறிஸ்மஸ்தீவு முகாமில் தடுத்து வைக்கப்படுவர்

### சட்டவிரோதிகளுக்கு கடும் எச்சரிக்கை

(சிட்னி)

அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைய முற்படுவோர் கிறிஸ்மஸ்தீவு முகாமில் வைக்கப்படுவர் என்று அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக, தென்கிழக் காசியாவைச் சேர்ந்தவர்கள் படகுகளில் அடிக்கடி வருவதாகவும், அவர்களை கிறிஸ்மஸ் தீவிலேயே தடுத்து வைப்பதாகவும் அவுஸ்திரேலியாவிற்குள் அவர்களை அனுமதிக்க முடியாதென்றும் குடிவரவுத்துறை அமைச்சர் பிலிப்றுடெக் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அங்கு முகாம்களில் தங்கவைக்கப்படுவோர் அத்தீவின் நிரந்தர பிரஜைகளாவதற்கு சந்தர்ப்பம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (து)

## சர்ச்சைக்குரிய இடத்தில் இந்து மதவழிபாட்டை நிறுத்த உச்ச நீதிமன்றம் உத்தரவு

(புதுடில்லி)

அயோத்தி நகரில் பாபர் மசூதி இருந்த இடத்தில் இந்துக்கள் எந்தவிதமான மத வழிபாட்டையும் மேற்கொள்ளக் கூடாது என இந்தியஉச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து, அங்கு பிராத்தனைகள் நடத்துவதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த முஸ்லிம்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்துள்ளனர்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த விஷ்வஹிந்து அமைப்பின் தலைவர், 'நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒரு அடிதான். ஆனால் அதுவே இறுதி முடிவாக இருக்காது' என்று தெரிவித்தார்.

இதேவேளை, முஸ்லிம்கள் மீதான இந்துக்களின் வெறுப்புணர்வு அதிகரித்து வருவதாகவும் அங்கு தற்போது பதற்றமான நிலைமையே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## புண்ணியசார தேரர் விரைவில் கரிகாலனைச் சந்தித்து பேசுவார்

(கொழும்பு)

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றப் போஷகர் வண.மஹகல்கடவல புண்ணியசாரதேரர் விரைவில் கொக்கட்டிச்சோலைக்குச் செல்லவுள்ளார்.

விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறைஅரசியற் பிரிவுப் பொறுப்பாளர் கரிகாலனை அங்கு சந்திப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தான் கரிகாலனைச் சந்திப்பதற்கான திகதியை எதிர்பார்த்திருப்பதாகவும் அங்கு இரு தினங்கள் தங்கவுள்ளதாகவும் புண்ணியசாரதேரர்தெரிவித்துள்ளார்.

வேறு ஐந்து பிக்குகள் இவருடன் கூடச் செல்லவுள்ளதாக தெரியவந்துள்ளது. (உ)

## அயோத்தி நகருக்கு மேலதிக படைகள் விரைவு

(புதுடில்லி)

அயோத்தியின்பாதுகாப்பை பலப்படுத்தும் முகமாகமேலதிக படைகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

அயோத்தியில் இந்துக்கள் கோவில் கட்டி வழிபடுவதற்கு இந்திய உச்சநீதிமன்றம்தடை விதித்ததன் விளைவாக வன்முறைகள் அங்கு வெடிக்காத வகையில் பாதுகாப்பு அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான துருப்புக்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே அங்குகடமையில்ஈடுபட்டுள்ள ஆறாயிரம் துருப்புக்களுடன் இணைந்து இவர்கள் கடமையில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## ஜனாதிபதி மீதுசேறு பூசும்வகையில் தவறான தகவல் பரப்பப்படுகிறது

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மீது சேறு பூசும் ஒரு நடவடிக்கையாக, ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டேயில் அமைக்கப்படும் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் தொடர்பாக தவறான தகவல்கள் மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றன.

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவுப் பணிப்பாளர் நாயகம் ஜனதாஸபீரிஸின் பெயரில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், ஜனாதிபதி மாளிகையில் நிலமட்டப் பணிகளுக்காக இதுவரை 80 கோடி ரூபா செலவிடப்பட்டிருப்பதாகவும், மேலும் 35 கோடி ரூபா செலவிட்டு பணிகளை முடித்து வைக்கத் தவறினால் தற்போது மேற்கொள்ளப்பட்ட நிலமட்ட அபிவிருத்திகள் மழை நீரால் அடித்துச் செல்லப்படக் கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் ஊடகங்கள் மூலம் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கான வாசஸ்தலம் அமைப்பது தொடர்பில் ஆரம்பம் முதலே தவறான தகவல்களைப்பரப்பி வந்தவர்களே இம்முறையும் இந்த உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஊடகங்களுக்குத் தெரிவித்து வருகின்றனர்.

ஜனாதிபதி வாசஸ்தலம் விவகாரத்தில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பரப்பப்படுவது குறித்து நாட்டு மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்காக இதனை நாம் தெளிவுபடுத்தக்கடமைப்பட்டுள்ளோம் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## சிம்பாவே தேர்தலில் பல்வேறு முறைகேடுகள்

### கண்காணிப்புக்குழு குற்றச்சாட்டு

(ஹராரே)

சிம்பாவேயில்இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கச் சென்ற கண்காணிப்பாளர் உட்பட சுமார் ஆயிரத்து 400பேரை ஜனாதிபதி றொபேர்ட் முஹாபே தடுத்து வைத்துள்ளார் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

தடுத்துவைக்கப்பட்டவர்கள் தமது விடுதலை குறித்து உண்ணாவிரதம் இருந்து வருவதாகவும் அவர்களது விடுதலைக்கு சிம்பாவேவிரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை முஹாபேயின் வெற்றியில் பல தேர்தல் முறைகேடுகள் நடத்துள்ளதாக எதிர்க்கட்சியினர் கோஷம் எழுப்பிவரும்வேளை முஹாபேயின் ஆதரவாளர்கள் அதனை முற்றாக மறுத்துள்ளனர். (உ-7)

## பாக். அமைச்சரின் இந்திய விஜயம் கபட நோக்கம் கொண்டதாம்

(புதுடில்லி)

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இந்தியா சென்று எல்லைப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்திருப்பதை ஒரு தந்திர நாடகம் என்று இந்தியா வர்ணித்துள்ளது.

பாகிஸ்தானிடமிருக்கும் 20க்கும் மேற்பட்ட கைதிகளை விடுவிப்பதைக் காலதாமதப்படுத்தவே இப்படிப் பாகிஸ்தான் செய்கிறது என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (து)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கம் நடாத்தும் 15,17 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை,

15 வயதின் கீழ் ''எ'' பிரிவில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி எதிர் உடுப்பிட்டி அ.மி.த.க அணியாழ். இந்துக் கல்லூரி மைதானத்திலும்,

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்திலும்,

15 வயதின் கீழ் ''பி'' பிரிவில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி அணி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும்,

17 வயதின் கீழ் ''பி'' பிரிவில்,

யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் கனகரட்ணம் ம.ம.வி அணி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் மோதவுள்ளன. (உ-3)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு, விழாச்சபை நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று திருநெல்வேலி ரி.சி. எஸ்.எஸ்.சி.வி.க.எதிர்உரும்பிராய் கணேசாவி.க.ஆகியன கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

## ஊழல் மிக்க நாடுகளில் இந்தோனேசியா முதலிடம்

(சிங்கப்பூர்)

ஆசியாவில் ஊழல் தலைவிரித்தாடும் நாடுகளில் இந்தோனேசியா முதலாமிடத்தில் உள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த புள்ளி விபரத்தின்படி இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

ஊழல் குறைந்த நாடுகளில் சிங்கப்பூர் முதலாவது இடத்திலும்,ஜப்பான் இரண்டாவது இடத்திலும், கொங்கொங் மூன்றாவது இடத்திலும் உள்ளன. (உ-5)

## அயோத்தியில் இன்று இந்துமத வழிபாடு

(அயோத்தி)


அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தை தவிர்த்து அதன் அருகில் இந்துமத வழிபாட்டை நடத்தப் போவதாக தீவிர இந்து அமைப்பான விஷ்வஹிந்துபரிசத்கூறுரைத்துள்ளது.

சர்ச்சைக்குரிய பகுதியில் மதவழிபாட்டை மேற்கொள்ளக் கூடாது என இந்திய உச்சநீதி மன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது.

எனினும், தாம் திட்டமிட்டபடி இன்று வெள்ளிக்கிழமை சர்ச்சைக்குரிய இடத்தில் இல்லாவிட்டாலும்அதன் அருகில் என்றாலும் மத வழிபாட்டை நடத்தியே தீருவோமென அவர்கள் கூறியுள்ளனர்.

இதனால் அயோத்தி நகரில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான பதற்றம் சற்றும் குறையவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)




## தீவக வலய விளையாட்டு போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

அண்மையில் தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் வருமாறு,

கரபந்தாட்டம் (17 வயதுப் பிரிவு)

1 ஆம் இடம்: ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி,

2 ஆம் இடம்: நாயினாதீவு கணேசா கனிஷ்ட வித்தியாலயம்,

3 ஆம் இடம்: நெடுந்தீவு மகாவித்தியாலயம்.

(19 வயதுப் பிரிவு

1 ஆம் இடம்: ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி,

2 ஆம் இடம்: நயினாதீவு மகா வித்தியாலயம்,

3 ஆம் இடம்: நயினாதீவு கணேசா கனிஷ்ட வித்தியாலயம்.

வலைப்பந்தாட்டம் (பெண்கள் 15 வயதுப் பிரிவு

1 ஆம் இடம்: கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் வித்தியாலயம்.

2 ஆம் இடம்: காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி,

3 ஆம் இடம்: வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு

1 ஆம் இடம்: காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி,

2 ஆம் இடம்: காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்,


3 ஆம் இடம்: நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

(19 வயதுப் பிரிவு)

1 ஆம் இடம்: கரைநகர் யாழ்ற்றன் கல்லூரி,

2 ஆம் இடம்: நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம்,

3 ஆம் இடம்: வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலயம். (எ-75)




## காரைநகர் மணற்கா

# ஸ்ரீ கும்பநாயகி முத்துமா

# தேர் முட்டி கல

# சிறப்பு மலர் —

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி



காரைநகர் மணற்காட்டில் கும்பநாயகியாக எழுந்தருள் பாலிக்கும் முத்துமாரி அம்பாளுக்கு அமைக்கப்பட்ட தேர்முட்டிக்கு கலச அபிஷேகம் நடைபெறுவது மகிழ் வைத்தருகின்றது. ஆலய விழாக்களில் தேர்த்திருவிழா முக்கிய இடத்தை பெறுகின்றது. மனிதன் அறியாமையை நீக்கி ஞான ஒளியை தருவது தேர்த்திருவிழா ஆகும் தேர் என்பது ஒரு கலைப் படைப்பாகும். நமது சமயத்தில் தேர் பல. விடயங்களில் பங்கெடுத்துக் கொள்கின்றன. இதனை உருவாக்கி அதற்கென அமைக்கப்பட் டிருக்கும் தேர் வதிவிட நிலையத்தை அமைத்து அதனுடைய நடுப்பகுதியில் கலசம் ஸ்தாபித்து அபிஷேகம் செய்வது இந்நிலையத்தை புனிதப்படுத்துவதாகும். மணற்காட்டில் கும்பநாயகியாக இருக்கும் முத்துமாரி அம்பாளுக்கு அமைக்கப்பட்ட தேர்முட்டிக்கு இன்று நடைபெறும் அபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் இதனை செய்கின்ற ஆலய சிவாசாரியார்கள், பரிபாலன சபையினர், மக்கள் அனைவருக்கும் அருள்கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

2வது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமசார்ய ஸ்வாமிகள்

## ஆலய பிரதம குருவின் ஆசியுரை



சர்வ உலகத்திற்கும் நாயகியாக விளங்குகின்ற ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்மன் என்னும்திருநாமத்துடன் எங்கள் உள்ளங்களில் வீற்றிருந்து அருள் மழை பொழிந்து திருவருள் பரிபாலித்து வரும் இரத்தின தீபம் எனப்படும் இலங்கையின் சிறப்பு மிகு யாழ்ப்பாணம் கரைநகர் மணற் புரத்தில் வீற்றிருக்கும் கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் ஈசானதிக்கில் சிறப்புற ரதஸ்தானம் புதிதாக எழில் மிகு வண்ணம் அமைக்கப்பட்டு பங்குனி மாதம் முதலாம் திகதி ஆகிய இன்று ரதஸ்தான கலசத்திற்கு கும்பாபிஷேகம் ஆன பின்னர் அந்த ஸ்தானத்தில் இருந்து தேரேறி பவனிவரும் அருள் மாதா முத்துமாரியம்மன் அம்பிகை அடியார்களிற்கு சகல ஐஸ்வரியமும் கிருபாகடாஷமும் கிடைக்க வேண்டும் என எமது நல்லாசிகளை தெரிவித்து ஆசீர்வதிக்கின்றேன்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நா.ஞானசம்பந்தக் குருக்கள்
(ஆலய பிரதமகுரு)

யாழ்ப்பாணம்/ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற

நீதிபதி திரு.ஆர்.ரீ.விக்னராஜா அவர்களின்

## ஆசிச்செய்தி



காரைநகர் மக்களின் சைவப்பற்று நாடறிந்தவொன்று அப் பெருமக்கள் அவ்வூர் மணற்காடு கும்பநாயகி அம்பாளின் தேர்முட்டித் தரிப்பிடம் அமைத்துக் கலாபிஷேகம் காணும் இப்பெருநாள் அவ்வம்மை அனைவருக்கும் அருளாசி நல்க அவர் தம் திருத்தாள் இறைஞ்சி அமைகின்றேன்.


இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம்

பெறுநர், பதிவாளர், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

## திருப்பணிச்சபைத் தலைவரின் வாழ்த்து

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் காரைநகரில் பாரம்பரிய பண்பாடுகள் பேணிப்போற்றப்பட்டு வருவதை அனைவரும் அறிவர். இத் திருத்தலத்தின் இதயமாகத் திகழும் மணற்காடுறை கும்பநாயகி அம்பாள் ஆலயத் திருப்பணிச் சபையினர் திருத் தேருக்குத் தரிப்பிடமொன்று அமைத்துக் கலாபிஷேகம் செய்யவுள்ள இத் திரு நாளில் அம்பாளின் அருட்கடாட்சம் அனைவரையும்உய்விக்க அப்பெருமாட்டியை வாழ்த்தி நிற்கின்றேன்.

வே.நடராஜா
தலைவர்
ஆலய திருப்பணிச்சபை





## தேர்முட்டி அமைந்

இற்றைக்கு 350ஆண்டுகளிற்கு முற்பட்ட பழம் பெரும் வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலய
ஆலயம் சிறப்புற அழகாக அமைந்த போதிலும் இதற்கான தேரும், தேர்முட்டியும் அமையப்பெ
வருடம் புதிய திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டது. திருப்பணிச் சபை உறுப்பினர்களின் அயரா
வள்ளல்களின் தளராத மனத்தினாலும் 01.06.2001அன்று வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரத்தில்
நாகரட்ணம் (E.S.P நிறுவனம்) அவர்களால் அத்திவாரம் இடப்பட்டது. அம்பாளின் அருட்கடாட்
ஐம்பது அடி உயரமான தேர்முட்டி பிரமாண்டமாக அமையப்பெற்றுள்ளது.

இவ்வாறு சிறப்புற அமையப்பெற்ற நிகழ்வானது ஆலய திருப்பணிச் சபையினருக்கும் கொ
சேர்க்கும் ஒன்றாகவே அமைந்துள்ளது. அதுமட்டுமல்லாது. இப் பிரமாண்டமான தேர்முட்டியினை
மனித வளங்கள் அனைத்தையும் காரைநகரைச் சேர்ந்த கலைஞர்களே வழங்கியுள்ளார்கள்
மூலம் காரைநகர் கலைஞர்களின் கலைத்திறனையும் வெளிக்காட்டும் சான்றாக அமைந்த படி

இத்தகைய சிறப்புகள் பொருந்திய தேர்முட்டியின் கலசத்திற்கு இன்று நடைபெறும் அபி
அமைக்கும் பணிகளும் சிறப்பாக நடைபெறு வதையிட்டு அடியவர்களாகிய நாம் ஆனந்தமடை
நிறைவடைந்து புதிய சித்திரத் தேரில் அம்பாள் எழுந்தருளும் இக் காட்சியை விரைவில் க
பணிந்து நிற்கின்றோம்.


| | | | |
|---|---|---|---|
| கயமுகன் ஹாட்வெயர்<br>147,149 ஸ்ரான்லி வீதி<br>யாழ்ப்பாணம் | குகன் ஸ்ரோஸ்<br>180, ஆஸ்பத்திரி வீதி<br>யாழ்ப்பாணம் | ஈஸ்வரன் ரேடேர்ஸ்<br>69, கஸ்தூரியார் வீதி<br>யாழ்ப்பாணம் | இ.ச.பே<br>50,52,54 |
| மலர் ரெக்ஸ்ரைல்ஸ்<br>18, பெரியகடை<br>67A, நவீனசந்தை யாழ்ப்பாணம் | சிவகணேசன் ஸ்ரோஸ்<br>41, பெரியகடை<br>யாழ்ப்பாணம் | றூபா பன்முக வர்த்தகம்<br>104A, ஸ்ரான்லி வீதி<br>யாழ்ப்பாணம் | ஜெய<br>20, |
| லிங்கம் வர்த்தக நிலையம்<br>78, கஸ்தூரியார் வீதி<br>யாழ்ப்பாணம் | கணேசன் ஸ்ரோஸ்<br>201, கே.கே.எஸ் வீதி<br>யாழ்ப்பாணம் | சிவாஸ் சென்ரர்<br>70, கஸ்தூரியார் வீதி<br>யாழ்ப்பாணம் | சிறி மா<br>34,க |

## இன்று ஒரு தகவல்

# திருடனுக்குத்திருட்டுப்புத்தி

ஒருமுறை சாது ஒருவர் வழியோரத்தில் சமாதியில் ஆழ்ந்திருந்தார். அந்த வழியாக ஒருதிருடன் போனான். அவன் அந்தச் சாதுவைப் பார்த்தான். அவரைப் பார்த்ததும் அவன் ஓகோ! இங்கே படுத்திருக்கும் இந்தப் பேர்வழியும் திருடன்தான் போல் இருக்கிறது. இன்றிரவு சில வீடுகளில் திருடிவிட்டு வந்திருக்கிறான். களைப்பினால் இப்போது இங்கு படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறான். சிறிதுநேரத்தில் இவனைப் பொலிஸ்காரார்கள் வந்து பிடித்துக்கொள்ளப் போகின்றார்கள். நான் அதற்குள்ளாக வேறு எங்காவது ஓடிப் போய் ஒளிந்து கொள்வேன் என்று நினைத்துக்கொண்டு அவசர அவசரமாக ஓடிப் போனான்.

சிறிதுநேரம் ஆயிற்று. அதே இடத்திற்கு ஒரு குடிகாரன் வந்து சேர்ந்தான். அவனும் சாதுவைப் பார்த்தான். 'ஓகோ! இப்படிப்பட்ட குடிகாரனாக இருக்கிறாயே! மூக்கு முட்டக் குடித்துவிட்டு இப்போது இந்தப் பள்ளத்தில் விழுந்து கிடக்கிறாயா? நானும்தான் குடித்திருக்கின்றேன். ஆனால் என் சுய புத்தியை நான் நிதானமாக வைத்துக்கொண்டிருக்கின்றேன். உன்னைப்போல நான் தள்ளாடி விழமாட்டேன்' என்று அவன் பிதற்றிக் கொண்டே போய்விட்டான்.

கடைசியாக ஒரு சன்னியாசி அங்கே வந்தார். அவரும் சாதுவைப் பார்த்தார். பார்த்தவுடனே அவருக்கு யாரோ ஒருமகான் சமாதியில் ஆழ்ந்திருக்கிறார் என்ற உண்மை புரிந்துவிட்டது. அவர் அந்தச் சாதுவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார். சமாதியில்ஆழ்ந்திருந்த சாதுவின் திருவடிகளைப் பற்றி இதமாக வருடத் தொடங்கினார். இவ்விதம் தான் நமது உலக ஆசைகள், உண்மையான பக்தியையும், தூய்மையையும் நமக்குத் தெரியவிடாமல் மூடி மறைக்கின்றன.

'மரத்தை மறைத்தது மாமத யானை!'

நன்றி

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்.

# வேலையின்மையால் விரக்தியடைந்த 108 பட்டதாரிகள் தற்கொலை

## பிரதமரிடம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த காலங்களில், வேலையின்மை காரணமாக மன விரக்தியடைந்த 108 பட்டதாரிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டில் 30 ஆயிரம் பட்டதாரிகள் வேலையற்றுள்ளனர். இவர்களின் பங்களிப்பு இந்த நாட்டின் அபிவிருத்திக்குக் கிட்டாமல் இருப்பதும் பெரும் துரதிஷ்டமே.

பாடசாலைகளில் முதலாம் தரத்தில் அனுமதி பெறும் மாணவர்களில் ஒரு சதவீதத்தினரே பல்கலைக்கழகம் சென்று ஒவ்வொரு வருடமும் பட்டதாரிகளாக வெளியேறுகின்றனர்.

இவ்வாறு 3, 4 வருடங்கள் பல்கலைக்கழங்களில் பெருங் கஷ்டப்பட்டுப் படித்து பட்டதாரிகளாக வெளியேறுவோருக்கு நாட்டில் இன்று எவ்வித மதிப்பும் இல்லாது போய் விட்டது துரதிஷ்டவசமே என்றுள்ளது. (உ)

## அகதிகளின் நிலைமையை நேரில் கண்டறிவு

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த குழுவினர்திருகோணமலைக்கு விஜயம் செய்து அங்குள்ள அகதிகளின் நிலைமைகளைக் கண்டறிந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அலஸ் தோட்டம், நிலாவெளி, மிகுந்தபுர ஆகிய பகுதிகளிலுள்ள அகதி முகாம்களை பார்வையிட்டுள்ளனர்.

சொந்த இடங்களில் மீளகுடியமர்வது தொடர்பாக அகதிகளின் அபிப்பிராயங்களையும்அவர்கள் கேட்டறிந்தனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன் ஆர் கூனி தலைமையில் இக்குழுவினர் அங்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-5(

## கலாமன்றத்தில் கல்வாரியாகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றம் ஆண்டுதோறும் நடத்தி வரும் தவக்கால ஆற்றுகை இவ்வாண்டும் 'கல்வாரியாகம்' என்ற பெயரில் இரு இடங்களில் நடைபெறவுள்ளது.

நாளையும் எதிர்வரும் 19, 20,22,23,24 திகதிகளிலும் நடைபெறவுள்ள இவ்வாற்றுகை நாளை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்திலும் ஏனைய 5 நாட்களும் யாழ் திருமறைக் கலாமன்ற அரங்கிலும் இடம்பெறவுளளது.

(உ 7)

## தரம் 4 ஆசிரியர்களுக்கான கைநூல் விநியோகம்

(மந்திகை)

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சினால், தரம் நான்கில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கைநூல் சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவற்றை வலயக்கல்வி அலுவலகங்களில் இருந்து அதிபர்கள் பெற்று, சம்பந்தப்பட்டவர்களுக்கு விநியோகித்து வருகின்றனர்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கையேட்டினை அதிபர்கள் இன்றுவரை பெற்றுக் கொள்ளலாம் என வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ-23)

## வர்த்தமானி பத்திரிகையின் 200 ஆண்டு பூர்த்தி விழா

(கொழும்பு)

அரச வர்த்தமானிப் பத்திரிகை வெளியிடப்பட்டு 200 ஆண்டுகள் ஆகியதை கொண்டாடு முகமாக இன்று முத்திரையொன்று வெளியிடப்படவுள்ளது.

ரூ.3.50 பெறுமதியான இந்த முத்திரை முதன்முறையாக இலங்கையில் அச்சிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.இது அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தால் வடிவமைக்கப்பட்டு, அச்சிடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் முத்திரைகள் வெளிநாடுகளிலேயே அச்சடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இரண்டு முத்திரைகள் அடுத்த இரு வாரங்களுள் வெளியிடப்படவுள்ளன. ஒன்று இலங்கையின் முதலாவது பிரதமர் டீ.எஸ்.சேனாநாயக்கவின் நினைவாகவும் இன்னுமொன்று காமினிதிசாநாயக்கவின் நினைவாகவும் வெளியிடப்படவுள்ளது.

(உ)

## கூட்டுறவு மாணவர்களால் 'சமாதானம்' நூல்வெளியீடு

(வவுனியா)

வவுனியா கூட்டுறவுப் பயிற்சி நிறுவன மாணவர்களினால் 20ம்திகதி புதன்கிழமை ''சமாதானம்'' என்னும் சஞ்சிகை வெளியிடப்படவுளளது.

கூட்டுறவுப்பயிற்சி நிறுவன அதிபர் எஸ்.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டுவிழாவில்வடக்கு, கிழக்கு மாகாண அமைப்பின் பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைப்பார்.

சஞ்சிகையின் முதற் பிரதியை வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் பெற்றுக்கொள்வார்.

இவ் வைபவத்தில் வடக்கு, கிழக்கு கூட்டுறவு ஆணையாளர் அ. சுப்பிரமணிய சர்மா, உதவி ஆணையாளர் செ.கு. சண்முகநாதன் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

சஞ்சிகையின் ஆய்வுரையை முன்னாள் திருகோணமலை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் எஸ். அருளானந்தம் நிகழ்த்தவுள்ளார். (வ)

## தென்மராட்சி பிரதேச செயலகம் வழமைக்கு திரும்பியது

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது சேதமடைந்த வீடுகளுக்கான நஷ்டஈட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள் பெரும் தொகையில், தென்மராட்சி பிரதேச செயலர் அலுவலகத்திற்கு தினசரி படையெடுத்து வருகின்றனர்.

இதுகுறித்த விண்ணப்பத்தினை அவ்வப் பகுதி கிராம சேவையாளர்கள் உறுதிப்படுத்தி, அதனைப் பிரதேச செயலர் அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியுள்ளது.

இதன்காரணமாக நுணாவில் சந்தியிலுள்ள சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கும் நாளாந்தம் அதிகமான மக்கள் சென்று வருவதையும் காணமுடிகின்றது. (உ-77)

## சிரமதானம்

(தென்மராட்சி)

யுத்தத்தினால் சேதமடைந்துள்ள மட்டுவில் மகா வித்தியாலயத்தினை அதன்சொந்த இடத்தில் மீள இயங்கும் பொருட்டு எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மாபெரும் சிரமதானம் நடைபெறவுள்ளது,

இச்சிரமதானப்பணியில் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள், பெற்றோர் நலன் விரும்பிகள் மற்றும் சமூக சேவையாளர்களையும் பங்கு கொள்ளும்படி அதிபர் மு,பாலசுப்பிரமணியமும், மட்டுவில் தெற்கு கிராம சேவையாளர் க.வாமதேவனும் கூட்டாகவேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-77)

## மத்திய மாகாண சபையைக் கலைப்பதற்கு இடைக்காலத் தடை

(கொழும்பு)

மத்திய மாகாண சபையை கலைக்கக் கூடாதென, இடைக்கால தடையுத்தரவொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. மத்திய மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் திசாநாயக்கா தாக்கல் செய்த மனுவின் விசாரணை கடந்த செவ்வாயன்று மேன்முறையீட்டு நீதியரசர்கள் ஜெயசிங்க, எதிரிசூரிய ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மத்திய மாகாண சபையில் பெரும் பான்மையானஉறுப்பினர்களின் ஆதரவு இருந்த போதும் தம்மை முதலமைச்சராக நியமிக்கமத்தியமாகாண ஆளுநர் தவறிவிட்டார் என்று தனது மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய மாகாண சபையின் முதலமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணை இம்மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

## யாழில் சம்பத் வங்கி

(யாழ்ப்பாணம்)

சம்பத் வங்கியின் கிளையொன்று விரைவில் யாழ். நகரில் திறக்கப்படவுள்ளது.

மேற்படி வங்கியின் தலைவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து இதன் அமைவிடத்தை பார்வையிட்டுச் சென்றார். (உ)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுசந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு ரி. கருணாகரனின் அறிமுகவுரையைத் தொடர்ந்து ''இலக்கியம் காட்டும் நெறி'' என்னும் தலைப்பில் எஸ். செந்தூர்ச்செல்வனின் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (செ)

## அரச ஊழியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய லீவு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கவுள்ள அரச, தனியார் கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய லீவு வழங்கப்பட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

தேர்தலில் வாக்களிப்பதற்கு அரச, தனியார், கூட்டுறவு ஊழியர்களுக்கு லீவு வழங்க மறுக்கும் அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தேர்தல் ஆணையாளர் எச்சரித்துள்ளார். (வ)

## சிந்தனைக்கு விருந்து

சர்வ இனத்தவரும் வாழச்
சமாதானக் கொடி ஏற்றும்

சர்வஅதி காரத்தால் எதையும் என்றும்
சாதித்தல் கூடும்எனத் தவறாய் எண்ணிப்
பர்வதமாய் நிமிர்ந்து மக்கள் தலைகள்மீது
பாரமாய் அழுத்தல்பெரும் பாவ மாகும்
கர்வத்தை மூட்டைகட்டி வைத்து விட்டுக்
கருத்துடனே நாட்டுமுன் னேற்றங் காணச்
சர்வஇன மக்களையும் ஒன்று கூட்டிச்
சமாதானக் கொடியினைவா னளாவ ஏற்றும்

-பழையவன்

# ஆட்சியைக் கூட ஆட்டிப்படைக்கவல்லதான
# "சினிமா" சகல கலைகளினதும் சங்கமம்


## எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி
பொதுச் செயலாளர்
சலன சித்திரம் யாழ். பிரதேசக்கிளை


இன்று சர்வதேசச் சினிமாத்தினம். படித்தவன்-பாமரன், ஏழை-பணக்காரன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற மனித குலத்தில் காணப்படும் வேறுபாடுகளுக்கு அப்பால் வாழ்க்கைப் போராட்டத்தை இரசிக்க வைக்கும் மக்கள் கலையான சினிமாவுக்கு இன்று வயது 107. ஓடும் பேசும் படம் **(Movie and Talkie)** சினிமா **(Cinema)** எனப் பெயரிடப்பட்டது.

**வல்லமை வாய்ந்தது**

சினிமாவைப் பார்க்காதவர் இல்லை; இரசிக்காதவர் இல்லை. மனதைப் பறிகொடுக்காதவர் இல்லை. என்று கூறுமளவுக்கு அதன் மவுசு உலகின் எல்லைகளைக் கடந்துவிட்டது. தொடர்பாடல்யுகத்தின் வருகையால் சின்னத்திரை மூலம் சினிமா ஒவ்வோர் இல்லத்திற்கும் விரும்பியோ விரும்பாமலோ நுழைந்துவிட்டது. அது மாபெரும் சக்தி, ஆட்சியைக் கூட ஆட்டிப்படைக்கும் அல்லது புதிய ஆட்சியை அமைக்கும் வல்லமை கொண்டது. சினிமா மூலம் மக்கள் தலைவர்கள் உருவானார்கள். நிழலாகக் கண்டதை நிஜமாக்கிக் காட்டினார்கள். புதியதொரு புரட்சியும் எழுச்சியும் தோன்ற சங்கங்கள் தோன்றின சண்டைகள் மூண்டன அது கொண்ட வல்லமை அனைத்தையும் ஆட்டிப் படைத்தது.

ஆம் கலைகளுள் அதிசக்தி வாய்ந்த ஊடகமான சினிமா சகல கலைகளின் சங்கமமாக விளங்குவது; கட்புல செவிப்புல வாயிலாக மனித மனங்களில் விருட்சமாவது; கலை இன்பத்தைப் பருக வைப்பது கருத்துக் குவியல்களின் கொள்கலமாவது; அழகியல் உணர்வை அனுபவிக்கத் தூண்டுவது; வாழ்வை நயம்பட தரிசிக்க வைப்பது; சிந்தனை ஓட்டத்தைச் சீர்செய்வது சிரிக்கவும் வைப்பது.

**தோமஸ் ஆல்வா எடிசன்**

இவ்வாறானபல்பரிமாணம் மிக்க சினிமாவை பற்பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் காரணகர்த்தா விஞ்ஞானி தோமஸ் ஆல்வா எடிசனே கண்டுபிடித்தார். *1895 - 03 - 15* ஆம் நாள் மனித சமூகம் மாபெரும சமூகமாக மாற்றம் பெற

வர்த்தகப் பண்டமாகச் சிறைப்பட்டுக் கிடக்கும் சினிமாவை விடுவிக்கப் போராட வேண்டும். மறுபுறம், 'சமூகத்தை வேகமாகச் சீரழித்து வரும் சினிமாவை அதே வேகத்தில் சமுகத்திலிருந்து அழித்துவிட வேண்டும்' எனப் பறைசாற்றும் சிந்தனா சூனியங்களிடமிருந்தும் சினிமாவைப் பாதுகாக்கப் போராட வேண்டும்.

மக்கள் தொடர்பு ஊடகங்களில் அதிசக்தி வாய்ந்த தன்மை கொண்டது சினிமா என்ற கருத்தை எவரும் மறுக்க முடியாது. மனித வாழ்வின் சகல கூறுகளையும் நிதர்சனமாக வெளிக் கொணர்வதிலும் எளிமையாக்குவதிலும் வெற்றி கண்டுள்ள துறையாக திரைக்கலைத்துறை விளங்குகிறது.

**கண்டனங்கள்**

சமூகச் சீர்கேடுகளைத் தட்டிக் கேட்கவும் ஒடுக்குமுறைக்கெதிராகக் குரல் கொடுக்கவும் மனித சமுதாயத்தில் நற்பண்புகளைவளர்க்கவும்பயன்பட்டு வந்த சினிமா, இன்று இளைய தலைமுறையின்எதிர்காலத்தை சீரழிக்கக் கூடிய அளவிற்கு தரங்கெட்ட ஒன்றாக மாறிவருவதாக பல தரப்பிலிருந்தும் கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இந்தக் குற்றச் சாட்டுக்கள் எவ்வளவு தூரம் உண்மையானவை என்பதை ஆராய்வோமேயானால், தனியே சினிமாவை நோக்கி தமது கணைகளைத் தொடுப்பவர்களும், அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப தமது பல்லவிகளை மாற்றுபவர்களும தரமான ஒன்றின வளர்ச்சிக்காக எவ்வளவு தூரம் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் என்றால அது கேள்விக்குரியதே. சினிமாவும ஒரு கலை வடிவம் என்ற சட்டத்தினுள் வருவதால் அது பற்றிய சரியான பார்வையும விழிப்புணர்வும சமுதாயத்தில ஏற்படுத்தப்பட வேண்டும. இதற்கு திரைக்கல்வி தொடர்பான விரிவுரைகள் பாடசாலை மட்டத்திலிருந்துஉயர் கல்விக் கூடங்கள் வரை ஒழுங்கு செய்யப்பட வேண்

லையா என்றால் ஒரு சிலரை திருப்திப் படுத்துவதற்காக நடிக்கின்ற தம்மைத் தாமே ஏமாற்றுகின்ற கலையை? வளர்க்கத் தொடங்கிவிட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது 'வீடியோ கலாசாரம்' எமது பண்பாட்டைச் சீர்குலைக்கிறது என்று குற்றம் சுமத்துபவர்கள் திருத்தங்கள் சொல்பவர்கள் விஞ்ஞானத்தை ஓரங்கட்டி விட்டு கலையையும், கலாசாரத்தையும், பண்பாட்டையும் கட்டிக்காக்க விளைகின்றனரா? மாற்றங்களுக்கு ஏற்ப புது மெருகு பெறுவது தான் ஒரு இனத்தின்பண்பாடு. அவரவர் தாம் தாம் வாழுங்காலத்தில் கலாசாரம் சீரழிகிறது என்று கொதித்தெழுந்தாலும் அது கால ஓட்டத்தில் தனக்குரிய வடிவத்தை எடுத்துக் கொண்டு செல்லும் தன்மையது. பண்பாட்டைப்பிரதிபலிக்கும்கலைக்கும் இத்தன்மை பொருந்தும். கலாசாரம், பண்பாடு இரண்டும் காலத்திற்குக் காலம் மாறிவருவது புது மெருகு பெறுவது உலக நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப புத்துயிர் பெறுவது என்பதை நாம் உணர்தல் வேண்டும் என்பதே யதார்த்தம்.

**சிங்கள சினிமா**

'சிங்களப் பேரினவாதத்தினால் கட்டவிழ்க்கப்படும் ஒடுக்குமுறைகளைத்தான் நாம் எதிர்க்க வேண்டுமே யொழிய சிங்கள மக்களையோ அவர்களின் கலை கலாசாரத்தினையோ அல்ல' திரைப்படம், ஓவியம், நாடகம் போன்றன சிங்கள மக்களிடையே மகத்தான வளர்ச்சியடைந்திருக்கின்றன. குறிப்பாகத் திரைப்படத்தினை எடுத்துக் கொண்டால், அவர்களை நாம் அணுகவே முடியாது. ஈழத்தில்தமிழ்த்திரைப் படத்துறையென ஒன்று வளர்ச்சியடைய வில்லை, இதன் வளர்ச்சியைத் தடைப் படுத்தும் காரணிகளும் பலவுண்டு என்று1989-90 காலப் பகுதியில் 'திசை' வாரவெளியீட்டில் 'தூவானம்' பத்தியை எழுதிவந்த 'நீலாம்பரன்' தனது ஆதங்கத்தை வெளிப்

ஏற்பட்ட பின்னரும் கூட அரசின் நிலைப்பாடுகளில் மாற்றம் தெரியவில்லை. அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கொலி போலாகி விட்டன. தேசியக் கொள்கை வகுக்கப்படும் என்று கூறிக் காலத்தைப் போக்கும் திரைப் படக்கூட்டுத் தாபனம், இலங்கையில் மிக நீண்ட கால இடைவெளிக்குப் பின் தமிழ்ச் சினிமாப்படத் தயாரிப்பில் ஈடுபட முன்வந்த செந்தமிழ் ஃபிலிம் கொம்பனி தயாரிப்பு

> **சர்வதேச சினிமாத்**
> **தினம் இன்றாகும்**

நிறுவனத்தினர் இந்தியாவிலிருந்து விருதுபெற்ற இணை ஒளிப்பதிவாளர் ஒருவரைத் தருவிக்க அனுமதி கேட்ட போது பொய்க்காரணங்களைக் கூறி அம்முயற்சியைத் தடுத்து நிறுத்தி கலைக்கு இனரீதியான அடக்கு முறையைப் பிரயோகித்துள்ளது.

**கலைஞரின் சுதந்திரம்**

இவ்வேளையில் தொழில் கலைஞர்கள் அனைவரும் இன, மத, மொழி, பிரதேச பேதங்களைக் கடந்து ஒன்றிணைந்து கலைத்துறையில் இனவாத, ஜனநாயக விரோதச் சட்டங்களையும் செயற்பாடுகளையும் தோற்கடித்து கலை மற்றும் கலைஞரின் சுதந்திரத்தை நிலைநாட்ட எழுச்சி கொள்வதைத்தவிர வேறு வழியில்லை.

நல்ல திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டுமானால் நல்ல திரைப்படங்களைப் பற்றிய உணர்வு மக்களிடையே வளரவேண்டும். இவற்றுக்கு திரைப்படச் சங்கங்களின் தோற்றம் இன்றியமையாதது. அவை திரைப்படம் பற்றிய கலந்துரையாடல்களை அங்கத்தினரிடையே ஊக்குவிக்கவேண்டும், தரமான ரசனையினை வளர்ப்பதை முக்கிய இலக்காகக்கொண்டு கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வரும் மாவட்ட திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலனசித்திரம்' நிறுவனம் தனது பணியினை முழு இலங்கைத் தீவிற்கும் விஸ்தரித்துள்ளது.

## இராசி பலன்

*15-3-2002*

(பங்குனி 1, வெள்ளி)
பிரதமை மு.ப. 10.11
உத்தரட்டாதி மாலை 6. 14
ராகுகாலம் 10. 51–12.21
நல்ல நேரம் 6. 21-7.51
சித்தாமிர்தம்

**மேடம்**

உணர்ச்சிவசப்படல், முயற்சி தாமதம், சயன சுகக் குறைவு, வீண்வார்த்தை.

**இடபம்**

நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், உறவினர் வருகை, கௌரவம்.

**மிதுனம்**

தொழில் முன்னேற்றம், சொத்துக்களால் நன்மை, அரச ஆதரவு, முயற்சி கைகூடும்.

**கடகம்**

தொழில் திருப்பம், வயிற்றுக் கோளாறு, காரிய தாமதம், அபகீர்த்தி.

**சிங்கம்**

எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், உடல் வியாதி, தொழில் கஷ்டம்.

**கன்னி**

ரோகம், முயற்சி கைகூடும் பயணம், நண்பர்கள் உதவி

**துலாம்**

காரிய அனுகூலம், உறவினர் சந்திப்பு, மனமகிழ்ச்சி, தொழில் விருத்தி.

**விருச்சிகம்**

முயற்சி விருத்தி, கௌரவக் குறைவு, திடீர் நன்மை, வியாபார நன்மை.

**தனுசு**

தாய்வழி உறவு, மனச் சோர்வு, ரோகபயம், காரிய தாமதம்.

**மகரம்**

இனிய சம்பவம், வாக்குப் பலிதம், பிரயாண நன்மை, சகோதரர் உதவி.

**கும்பம்**

குடும்ப நன்மை, இலட்சுமீகரம், வீண் விவாதம், காரிய தாமதம்.

**மீனம்**

மனக்குழப்பம், போசன சுகம், முயற்சி நிறைவேறும், பெண்கள் உதவி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

**வளவன்**

## நாய்களுக்கு
நோய்த் தடுப்பூசி

மிக்க சினிமாவை பற்பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் காரணகர்த்தா விஞ்ஞானி தோமஸ் ஆல்வா எடிசனே கண்டுபிடித்தார். 1895 - 03 - 15 ஆம் நாள் மனித சமூகம் மாபெரும சமூகமாக மாற்றும் பெற உதவிய மகத்தான நாள். அன்றைய தினம் பிரான்ஸ் நாட்டில் அசையா நம்பிக்கையுடன் அசையும் படத்துக்கான முதலாவது ஒளிபபதிவ மிகவெற்றிகரமாக நடந்தேறியது. முன்னர் மௌனப் படம, பின்னர் பேசும்படம் என்றுயர்ந்து நிற்கும் சினிமாவின தோற்றத் தையும வளர்ச்சியையும் 107 ஆண்டுகளுக்குப் பின இன்று நாம திரும்பிப் பார்க்கின்றோம. சினிமா ஒரு கலையா? ஊடகமா? வர்த்தகப பண்டமா தொழிலா? என்பது பதிலிறுக்கப்பட வேண்டியவினாக்கள்.

சுரண்டும் பெருந்தயாரிப்பு நிறுவனங்களிடம் வெறும் வருவதால் அது பற்றிய சரியான பார்வையும விழிப்புணர்வும சமுதாயத்தில ஏற்படுத்தப்பட வேண்டும. இதற்கு திரைக்கல்வி தொடர்பான விரிவுரைகள் பாடசாலை மட்டத்திலிருந்துஉயர் கல்விக் கூடங்கள் வரை ஒழுங்கு செய்யப்பட வேண்டும. அதன் வாயிலாக சினிமா மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும விமர்சிக்கப் படுவதற்கும வாய்ப்பு ஏற்படும.

தென்னிந்திய சினிமா என்றால் வேண்டவே வேண்டாம் என்று கூப்பாடு போடுபவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வெளிவரும தமிழ்படங்களில உள்ள கலை நுட்பங்கள், நாகரிகங்கள் ஒன்றைத் தானும பின்பற்றவில்லையா? அவற்றிலுள்ள கலை நுணுக்கங்களை தமது தயாரிப்புகளான நாடகங்கள், இலக்கியங்களில் பயன்படுத்த வில் படத்துறையென ஒன்று வளர்ச்சியடைய வில்லை, இதன் வளர்ச்சியைத் தடைப் படுத்தும் காரணிகளும் பலவுண்டு என்று1989-90 காலப் பகுதியில் 'திசை' வாரவெளியீட்டில்'தூவானம்' பத்தியை எழுதிவந்த 'நீலாம்பரன்' தனது ஆதங்கத்தை வெளிப் படுத்தியிருந்தார். இங்கு தமிழ்த் திரைப் படத்துறை வளர்ச்சியடையாமைக்கு மாறி மாறி பதவிக்கு வரும இனவாத அரசுகளின் ஒடுக்கு. முறையே காரணமாகும் தமிழ்த்திரைப்படத் தயாரிப்பு தொடர்பாகத் தேசிய திரைப் படக் கூட்டுத் தாபனம் மேற்கொள்ளும நடவடிக்கைகளைக் கண்டித்தும் அதனை மாற்றக் கோரியும் 'சலன சித்திரம்' -000 ஆம் ஆண்டு வெளளவத்தை பொதுச் சந்தைக்கு முன்பாக ஆர்ப்பாட்டமறியல் உள்ளிட்ட பல போராட்டங்களை நடத்தி இருந்தது. ஆட்சி மாற்றம் கக்கொண்டு கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வரும் மாவட்ட திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலனசித்திரம்' நிறுவனம் தனது பணியினை முழு இலங்கைத் தீவிற்கும் விஸ்தரித்துள்ளது.

'இலங்கைத் தமிழ்சினிமா தனது தற்போதைய சூழ் நிலையின ஊடாக உலகத் தரம் வாய்ந்த பல அசாத்தியமான படங்களைத் தரமுடியும்' என்று நான் திடமாக நமபுகின்றேன் என்று இயக்குநர் பாலு மகேந்திரா கூறியதை நினைவுகூர்ந்து, இனி இங்கு தமிழ்த்திரைககலை வளரும், அது வேகமாயும் செல்லும், வெற்றிகளையும் வெல்லும்என இத்தினத்தில் உறுதி கொள்வோம். கலைகளின சங்கமமான சினிமாவைக் காத்திடுவோம். மக்கள் சினிமாவை உருவாக்கிவளர்த்திடுவோம். □

பெண்கள் உதவி.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது).

**வளவன்**

## நாய்களுக்கு நோய்த் தடுப்பூசி

(மந்திகை)

கரணவாய் பொதுசுகாதார பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நோய்த் தடுப்பூசிபோடப்பட வுள்ளது.

25 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கரணவாய் கலைமதி சனசமூக நிலையத்திலும், பி.ப. 1.30 மணிக்கு நவிண்டில்உபதபால்நிலையத்திலும் 26 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு மண்டான் சன சமூக நிலையத்திலும், பி.ப. 1.00 மணிக்குசோளங்கன் சனசமூக நிலையத்திலும் மேற்படிதடுப்பூசிபோடப்பட வுள்ளது. (எ-23)

## கள் விற்றவர்கள் குற்றப்பணம் செலுத்தினர்

(மந்திகை)

சட்டவிரோதமான முறையில் வடமராட்சி பகுதிகளில் கள் விற்பனைசெய்த 9 பேரிடம் பருத்தித்துறை நீதிமன்றம் குற்றப்பணம் அறவிட்டுள்ளது.

கடந்தவாரம் பருத்தித்துறை மதுவரி திணைக்கள அதிகாரி றோகான் சஞ்சேராஜு தலைமையில் பருத்தித்துறை, கரவெட்டி, துன்னாலை, மாதனை, புலோலிப் பகுதிகளில திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது அனுமதி சான்றிதழின்றி மதுபானம் விற்ற 9 பேர் கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்யப்பட்டது.

இவர்களுக்கெதிரான வழக்கின்போது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மொத்தமாக 14 ஆயிரத்து 250 ரூபா குற்றப்பணமாக அறவிடப் பட்டது. (உ-23)

## தபால் பொதிகள் எடுத்துவருகை

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். வந்த சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் குடாநாட்டிற்கான 336 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

அதேவேளை, இங்கிருந்து வெளியூருக்கான 45 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப் பட்டன. (உ-3)


## தேர்தல் வன்முறைகள் இம்முறை குறைவு

இம் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலினை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்த விடாது குழப்பும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வரும் அதிகாரிகள தொடர்பாக பல் வேறுபட்ட குற்றச் சாட்டுக்கள் வந்தவண்ணமுள்ளதாகவும், இக் குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதும் அவ்வதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் ஒப்பிடுமிடத்து இம்முறை 80சதவீதத்தால் குறைவடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ- 8)

# ...னற்காடு அருள்மிக
# ...துமாரி அம்மன் கோவில்
# ...கலச அபிடேக
# ... — 15.03.2002



## இந்து கலாசார அமைச்சரின் ஆசிச் செய்தி



இலங்கையில் வடபாலமைந்த எழில்மிகு யாழ்ப்பாண தீவகற்பத்தைச் சூழ்ந்த சப்த தீவுகளில் ஒன்றும் பல புண்ணிய சைவத் திருத்தலங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தர்மநெறியில் உண்மைச் சமய வாழ்வினைக் கைக்கொண்டு இறை வழி பாடாற்றி வருகின்ற சைவப்பண்பாடு மிக்க மக்கள் வாழும் பிரதேசமாக விளங்குகின்ற காரைநகரின் மணற்காடு முத்து மாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேர்முட்டிக்கு பங்குனி முதலாம் நாளான இன்று கலச அபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இற்றைக்கு 350 ஆண்டுகளிற்கு மேற்பட்ட பழம் பெரும் வரலாற்றுப் பெருமை மிக்க முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இவ்வாறான ஐம்பது அடி உயரமான பிரமாண்டமான தேர்முட்டி நிர்மாணித்த பெருமை இவ் ஆலய திருப்பணிச் சபையினருக்கே உரியதாகும் ரதோற்சவ காலத்தில் அம்பாள் தேரில் எழுந்தருளும் காட்சிக்கு மென்மேலும் மெருகூட்டும் வகையில் அழகாக அமைந்துள்ளது.

''அன்பர் பணிக்கென்னை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே''

என்ற தாயுமானவரின் வாக்கின்படி அம்பாளின் திருப்பணித் தொண்டிற்கு தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி பெருமைமிக்க தேர்முட்டியினை அமைத்துள்ளனர். இதன் சிரசில் அமைந்துள்ள கலசத்திற்கு அபிஷேகம் நடைபெறும் நேரம் அடியார்களுக்கெல்லாம் அம்பிகை அருள்பாலிக்கவும் இந்த புதிய தேர் முட்டியினை இலகு வாகவும் விரைவாகவும் அமைத்தது போல இவ் ஆலயத்திற்கு புதிய தொரு தேர் அமைக்கும் பணியும் விரைவாகவும் சிறப்பாகவும் நடை பெறுவதற்கு மணற்காட்டு முத்துமாரி அம்பாளை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**தி. மகேஸ்வரன் இந்து கலாசார அமைச்சர்.**



(பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட அம்பாளிற்கான தேர்தரிப்பிடத்தின் அழகிய தோற்றம் )

## வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை

காரைநகரின் மத்தியிலே இருந்து அருளாட்சி புரிகின்ற முத்து மாரி அம்பிகையின் தேர் முட்டி கலச அபிஷேகம் இன்று நடை



பெறுவதையிட்டு அடியவர்கள் பேருவகை அடைகின்றனர் இங்கு நடைபெறுகின்ற நித்திய பூஜைகள். உற்சவங்கள், வேள்வி ஆகியன அன்று தொட்டே தனித்துவமான பக்தி சிரத்தையுடன் நடை பெறுவதை நாம் அறிவோம்.

பிரதம சிவாச்சாரியார் ஞான சம்பந்தக் குருக்கள் அவர்கள் அதிகாலையிலும் முன்னிரவிலும் தீபங்களால் அம்பிகையை ஆராதிக்கும் போது அருளாட்சிக்கு உட்படுவது எமது அனுபவம் தொற்று நோய்கள் வராமல் எமது மக்களைப் பாதுகாக்கும் தெய்வமாகவும் அவ்வாறு தொற்றுநோய்கள் வந்தாலும் அவற்றிலிருந்து எம்மைக் காக்கும்தெய்வமாகவும் முத்துமாரி அம்பிகையை வணங்குவது எமது மரபு.

நீண்ட நாட்களாக சிறந்த சித்திரத்தேரும் முட்டியும் அமைக்கப்பலர் முயற்சி எடுத்த போதும் அவை நிறைவேறவில்லை இன்று அம்பிகையின் திருவருளால் தேர்முட்டி வேலைகள் நிறை வேறியுள்ளன விரைவில் தேர் வேலைகளும் நிறைவேற அம்பிகையைப் பிரார்த்தித்து ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**ப.விக்னேஸ்வரன்.**
வலயக் கல்விப்பணிப்பாளர் தீவகம்

## ...மைந்த வரலாறு


...மை கொண்ட ஆலயமாக மணற்காட்டு முத்துமாரியம்மன் ஆலயம் விளங்குகின்றது. இவ் ...முட்டியும் அமையப்பெறாதது பெரும் குறையாகவே இருந்தது. இந்த நிலையில் சென்ற ...ப்பினர்களின் அயராத உழைப்பினாலும், கொடை ...அத்த நட்சத்திரத்தில் பிரபல வர்த்தகர் பேரம்பலம் ...பாளின் அருட்கடாட்சத்தினால் குறுகிய காலத்தில்

...பயினருக்கும் கொடை வள்ளல்களிற்கும் பெருமை ...ன தேர்முட்டியினை உருவாக்குவதற்கு தேவையான ...வழங்கியுள்ளார்கள் ஆதலால் இத் தேர்முட்டியின் ...றாக அமைந்த படியால் காரை அன்னையும் பெருமிதமடைவாள் என்பதில் ஐயமில்லை. ... நடைபெறும் அபிஷேகத்தினைக் கண்டு களிப்படையும் அதே வேளை சித்திரத்தேர் ... நாம் ஆனந்தமடை கின்றோம். தேரின் அமைப்பு பணிகளும் விரைவாகவும் சிறப்பாகவும் ...சியை விரைவில் காண்பதற்கு அம்பாள் அருள்பாலிக்க வேண்டுமென்று அவள்தாள்

**ப. ஐங்கரன்**
**காரைநகர் செய்தியாளர்.**

## திருப்பணிச்சபை பொருளாளரின் செய்தி

அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலய தேர்முட்டி கலச அபிடேக விழா தொடர்பான பத்திரிகை சிறப்பிதழுக்கு வாழ்த்து செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



இவ்வாலயம் சகல சிறப்புக்களுடனும் கூடிய, ஊரின் மத்தியிலே விளங்கும் ஆலயமாக இருந்தபோதும், ஒரு சித்திரதேரும் அதற்கான தேர்முட்டியும் இல்லாதமை ஒரு பெருங்குறையாக இருந்து வந்தது.

கடந்த வருடம் புதிதாக தெரிவு செய்யப்பட்ட திருப்பணிச்சபையினர் ஒரு வருட காலப்பகுதியினுள் புதிய சித்திரத்தேர் நிர்மாணத்துக்கான கால்கோள் விழாவை நடத்தவும், புதிய தேர்முட்டியை நிர்மாணித்து கலச அபிடேகம் செய்விக்கவும் முன்னின்ற அம்பிகையின் திருவருளை வியந்து ஆனந்தமடைகிறேன்.

மேலும் இத் தேர்முட்டி நிர்மாணவேலைகளை சிறப்புறமேற் கொண்ட கலைஞர்களுக்கும், திருப்பணிக்கு நிதியுதவி நல்கிய பெருமக்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

*''மேன்மைகொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்''*

**இ.சுந்தரலிங்கம்**
**அதிபர் - பொருளாளர்**
**ஆலய திருப்பணிச்சபை**


...ர்ஸ்
வீதி

**இ.ச.பேரம்பலம் அன் சன்ஸ்**
50,52,54 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**மகாலஷ்மி ஸ்ரோஸ்**
212, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

**இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்**
57, நவீன சந்தை
யாழ்ப்பாணம்

...ந்தகம்
வீதி

**ஜெய கிருஸ்ணா**
20, கே.கே.எஸ் வீதி
சுன்னாகம்

**மதுரா நகைமாடம்**
59, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**கணபாலா ஸ்ரோர்ஸ்**
24, நவீன சந்தை
மேல்மாடி, யாழ்ப்பாணம்

...ர்
வீதி

**சிறி மாயவா களஞ்சியம்**
34, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

**லிங்கன்**
தொலைத்தொடர்பு நிலையம்
ஆலடி, காரைநகர்
T.P.070-21.3061

**சிறீ முருகன்**
தொலைத்தொடர்புநிலையம்
303, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்
T.P 021-2970

# உயர்தரமாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல: 98 தொகுப்பு: ரீ. மயூரன்

### பொது அறிவு

● 01 -05 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட நான்கு விடைகளுள் சரியானதை தெரிவு செய்க.

01) சர்வதேச உழைப்பாளர்கள் நிறுவனத்தின் தலைமையகம் எங்குள்ளது?
1) அமெரிக்கா 2) ஜெனிவா
3) ஜப்பான் 4) நோர்வே

02) ஸ்பெயின் நாட்டின் தேசிய சின்னம் எது?
1) மயில் 2) கிளி 3) கழுகு 4) காகம்

03) கிரிக்கெட் ஆட்டத்தில் சதம் அடித்த முதல் வீரர்யார்?
1) சார்லஸ் பானர் மேன் 2) முத்தையா முரளிதரன்
3) கபில் தேவ் 4) சௌரவ் கங்குலி

04) நைல்நதியின் நன்கொடை எனவர்ணிக்கப்படும் நாடு எது?
1) எகிப்து 2) ஐரோப்பா 3) ஆபிரிக்கா 4) இலங்கை

05) உலகில் மிக உயரத்தில் அமைந்துள்ள ஏரியின் பெயர் என்ன?
1) பஸ்கால் ஏரி 2) தித்திக்காஏரி
3) ஜமுனாஏரி 4) கங்கேரி

● சுருக்கமான விடை தருக.

06) அணுக் கொள்கையின் தந்தை என அழைக்கப்படும் விஞ்ஞானி யார்?
07) தாஜ்மகால் எத்தனையாம் ஆண்டு கட்டப்பட்டது?
08) உலகின் மிகப் பெரிய உயிரினம் எது?
09) ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
10) இரசாயனப் பொருட்களின் அரசன் என அழைக்கப்படும் இரசாயனப் பதார்த்தம் எது?

● பின்வரும் உபகரணங்களை கண்டு பிடித்தவர்கள்யார்.

11) ஜெற் இஞ்சின்
12) ராடர் —
13) சேவிங் றேசர் —
14) மூக்குக் கண்ணாடி —
15) சைக்கிள் ரயர் — —

● பின்வரும் நாடுகளை குறியீட்டுப் பெயரில் எப்படி அழைப்பர்.

16) அவுஸ்ரேலியா — — —
17) ரோம் — — — —
18) தாமோதர் நதி — —
19) டட்ஸான்-டி-குன்கா — —
20) துருக்கி — — — —

### நுண்ணறிவு

● 21- 25 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் வேறுபட்ட இரு சொற்கள் தரப்பட்டுள்ளன. அவ்விரு சொற்களையும் குறிக்கும் ஒரு சொல்லை தருக.

21) யானை; கோழி: — —
22) குதிரை; ஒரு மரம்: — —
23) சங்கின் ஒரு வகை; ஒரு பத்திரிகை: — — —
24) கோபித்தல்; தவசி — —
25) பாலில் படர்வது; நூல்: — — — —

● கீறிட்ட இடங்களில் வரவேண்டியதை எழுதுக.

26) 12, 36 - 11, 33 - 18, - - — , 27
27) M, Q - I, M - V, - - — , D
28) க், ச - த், ப - ய், — - - - , ண
29) $6^{B}$, $12 - 7^{C}$, $21 - 9^{F}$, ___ - $3^{A}$, ___
30) 3, 6, 9, 11, 14, —, —

● வெற்றிடத்தை நிரப்புக.

31) MALT (ATOM) MODE
IDLE ( ) RAKE

32)

| | | |
|---|---|---|
| 26 | 80 | 14 |
| 32 | | 28 |

33) FAIL-2461, TOLD-9473,
TAME-2538, MODEL, — —

34) SOLD-3518, LAME-1576
MOST-7432, MATES — —

35) SUBA-3749, ASHA-9349
TASA-6939, HUSA — — —

● கீழக்காணும் சமன்பாட்டை சுருக்கியதும்இருபக்கங்களும் சமனாக அமையக்கூடிய சமன்பாடுகளை அமைக்குக.

36) $(4\times3)\times(5+2)+(20\div2)=(8\times4)+(6\times4)+(7\times2)$
37) $(4\times3)+(5\times2)+(20x2)=(8\times4)+(6\times4)+(7\times2)$
38) $(4x3)+(5x4)+(20\div2)=(8x4)+(6x4)\ (7x2)$
39) $(4x3)+(5x4)+(20\div2)=(6x4)+(6x4)+(7x2)$
40) $(4x3)+(5x2)+(20\div2)=(6x4)+(6x4)+(7x2)$

---

**அறிவியல் பகுதி**
**வினா இல: 98**

"வலம்புரி"

இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

மாணவர் முழுப்பெயர்: ______

சொந்த முகவரி: ______

கற்கும் பாடசாலை ______

மாணவர் கையொப்பம்: ______

இப் படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பவும்.

---

# அபிவிருத்தி நிதியில் பெரும்பங்கு நிர்வாக செலவுக்கு பயன்படுகிறது

## விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் கணிசமான தொகை நிர்வாகச் செலவுகளுக்காக செலவிடப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பிரிவு இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களின் கவனத்திற்கு இது விடயம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அபிவிருத்தி வேலைகள் தாமதமாவதே இந்நிலைக்கு காரணமெனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் இவ்வாறன செயல்கள் இடம்பெறாது தவிர்க்க வேண்டியதன் அவசியத்தையும் புலிகள் வலியுறுத்தியுள்ளனர். (உ)

## பிரதமரை பார்க்க முண்டியடித்த மக்கள்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்.வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பார்வையிடுவதற்கு,அவர் வருவார் என அறிவிக்கப்பட்ட இடங்களில் பெருமளவில் மக்கள் கூடியிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

யாழ்.செயலகத்தில் இடம் பெறும் மாநாட்டில் பங்கேற்கும் வகையில் மதியம் உலங்கு வானூர்தியில் துரையப்பா விளையாட்டரங்கில் வந்திறங்கினார்.

இதனைப் பார்வையிட நேரேத்தோடே அப்பகுதியில் மக்கள் கூட்டம் அலை மோதிய போதிலும், மதியம் ஒரு மணிக்கே துரையப்பா விளையாட்டரங்கப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு எவரையும் அப்பக்கம் அணுக விடவில்லை.

இதனால் ஆங்காங்கே வீதியோரங்களில் மக்கள் தேங்கி, பிரதமரைப் பார்க்க முடியுமா என ஏங்கி நின்றனர்.

இருப்பினும் இவர்களுடைய ஆசை நிறைவேற வில்லை.பிரதமர் 5 உலங்கு வானூர்திகள் புடைசூழ வந்திறங்கி,தனது ஆடம்பர காரில் ஏறி செயலகம் சென்று விடவே,

அவர் வந்த உலங்கு வானூர்தியையாவது பார்க்க அனுமதிக்குமாறு மக்கள் கோசம் போட்டனர். அதற்கு அவர்களுக்கு பின்னர் அனுமதி வழங்கப்பட்டது. (உ-19)

## உயிர்ப்பூட்டல் குழுக்களுக்கு தெருக்கூத்து போட்டி

(மீசாலை)

யாழ்.மனித முன்னேற்ற நடுநிலையம், உயிர்ப்பூட்டல் குழுக்களுக்கிடையே தெருக்கூத்து போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

'வாழும் உரிமையைஉறுதிப் படுத்துவோம்'எனும் தலைப்பிலான இத்தெருக்கூத்துப் போட்டியில் பங்கேற்கவிரும்புவோர் தமது விண்ணப்பப் படிவங்களை இம் மாதம் 30 ஆம்திகதிக்கு முன்னர்இயக்குநர் மனித முன்னேற்ற நிலையம் தியோகு வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-229)

## சாரணிய அங்கத்துவ சின்னம் சூட்டப்பட்டது

(மீசாலை)

பலாலி ஆசிரிய கலாசாலையில் சாரணியப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் ஒரு தொகுதியினருக்கு கிளிநொச்சி சாரண சங்கத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை, சாரணிய அங்கத்துவ சின்னம் சூட்டும் வைபவம் பலாலி ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் குருளைச் சாரணத் தலைவர்களுக்கும், சாரணத் தலைவர்களுக்கும் சின்னம் சூட்டப்பட்டது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர்களான திருமதி ஆர். எக்ஸ். சேவியர், மு. இரவீந்திரன், நா. கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-229)

## உடுப்பிட்டிப் பாடசாலை மாணவிகள் வலம்புரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள நேற்றைய தினம் கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு, வலம்புரி பத்திரிகைக் காரியாலயப் பணிகளைப் பார்வையிட்டனர்.

இக்கல்விச்சுற்றுலாவில் நூற்றுக்கணக்கான மாணவிகள மற்றும் ஆசிரியர்கள் இடம்பெற்றிருந்தனர். (உ)

## கலந்துரையாடல்

(மீசாலை)

யாழ்.மனிதமுன்னேற்றநடு நிலையத்தின் உயிர்ப்பூட்டல் செயல் திட்டத்தில் ஊக்குவிப்பாளர்களாக கடமையாற்றுபவர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப 3.00 மணிக்கு கியூடெக் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக இணைப்பாளர் எஸ். யோசப் பாலா அறிவித்துள்ளார். (உ- 229)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

கோண்டாவில் சி. சி. த. க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று பி.ப 1.30 மணிக்கு பாடசாலை அருகில் உள்ள மைதானத்தில் அதிபர் இ. அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தி. கமலாம்பிகை கலந்து கொள்ளவுள்ளார். (உ)

---

## அறிவியல் வினாஇல- 97

அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் விபரம்

01) றேனுஜா பிரான்சிஸ், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
02) சிவகுமாரன் சயந்தன், வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
03) ஏகாம்பரம் டுசாந்தன், வட்டு. இந்துக் கல்லூரி
04) றெ. வேஜின் விஜிதா, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம
05) க. சிவாஜினி, நல்லூர்
06) க. கோபிராஜ், 1 ஆம் வட்டாரம் நெடுந்தீவு
07) தம்பிராஜா தனுஷன், யாழ். இந்துக் கல்லூரி
08) லோகநாதன் கோபிநாத், 1ஆம் வட்டாரம்நெடுந்தீவு
09) சிவானந்தசோதி வினோதினி, வட்டு.இந்துக் கல்லூரி
10) கவீந்திரன் தர்மினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

## அறிவியல் வினா இல-97

1) தமிழ்
2) வ. வே. சு. ஐயர்
3) ஹூக்கா பெசியோலி
4) 1996
5) இஸ்ரேல்
6) கார்ல்மாக்ஸ்
7) 1) மியான்மர் 2) தாய்லாந்து 3) லாவோஸ்
8) சார்ள்ஸ்டார்வின்
9) மருதம்
10) பேராசிரியர் சு. வித்தியானந்தன்
11) உலக வணிகக்கழகம்
12) அமெரிக்க தொலைக் காட்சிசேவை
13) சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம்
14) ஐரோப்பிய காவல் துறை
15) சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம்
16) துன்பத்தை சகித்துக் கொள்ளுதல்
17) இரங்குதல்
18) வழிபடுதல்
19) பிறர் பாதம்தொட்டு சபதம்செய்தல்
20) அறிவு தளர்தல், அன்பு குறைதல்
21) ஐயம்
22) துயில்
23) கண்டம்
24) நகை
25) பிணி
26) கணவாய்
27) எண்ணெய்
28) MAD
29) பிணை
30) Calf
31) 35
32) 31
33) 27
34) எ7
35) 015
36) ஆ
37) ஓர்
38) உந்தி
39) இலங்கை
40) எல்லாரும்

குறிப்பு:-விடைகளை வேறுதாளில்எழுதி20.03.2002 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்

ஒல்வதறிவது அறிந்ததன் கண் தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்
- குறள்

# வலம்புரி

## பயன் தருமா

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றைய தினம்யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தமை அவரின் சமாதான முயற்சிக்கு கிடைத்த மகத்தான வெற்றி எனலாம்.

கடந்த இருபது வருடங்களின் பின் நாட்டின் பிரதமர் ஒருவர் யாழ்ப்பாண மண்ணில் காலடி வைத்தது வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய ஓர் நிகழ்வாகும் பிரதமர் ரணிலும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக தென்னிலங்கையிலும் அமைச்சர்களும், எம்.பிக்களும் நிம்மதியாக நடமாடுகின்றனர். இருபது வருடகால யுத்தத்தில் எத்தனை பாதுகாப்பு வழங்கினாலும், நாட்டின் பிரதமரால் யாழ்ப்பாணத்திற்கு வரமுடியாது. அவ்வாறு யாழ்ப்பாணம் வரவேண்டுமாயின் விடுதலைப்புலிகளின் அனுமதி வேண்டும்என்பது பிரதமரின் வருகையோடு, நாட்டின் பேரினவாதிகளுக்கும் சர்வதேசத்திற்கும் உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது, யாழ்ப்பாணத்தைப் படையினர் கைப்பற்றினாலும் ஒரு பிரதமரின் யாழ் வருகைக்கு பச்சைக் கொடி காட்ட வேண்டியவர்கள் புலிகள்.

அவர்கள்பச்சைக்கொடி காட்டினால் மட்டுமே தென்னிலங்கை அரசியல் வாதிகள்பாதுகாப்புடன், பயமின்றி வரமுடியும்.

ஆனால் ஓர் எச்சரிக்கையையும்யாழ்வரும் அமைச்சர்கள்உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் சாட்டாக வைத்து, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தால் மட்டும்இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதிலும், தமிழ் மக்களின் மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றைவழங்கவும் துணிய வேண்டும்.


நாட்டில் நிரந்தர சமாதானம் என்பது, சிங்களத் தலைவர்கள் தமிழர்களின் தாயக உரிமைகளை வழங்குவதில் காட்டும் தாராளப் போக்கிலேயே யுள்ளது. இவற்றிலிருந்து தவறும் பட்சத்தில், மீண்டும் நாட்டில் இனயுத்தம் வெடிக்கும்.

அதன் பின்னர் ஸ்ரீலங்காவின் பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு கடவுச்சீட்டு எடுக்கவேண்டிய தேவையும் ஏற்படலாம்.

## வெள்ளி நற்சிந்தனை

# கடைச்சங்க இலக்கியச் சொற்றொடர்களில் சிவ வழிபாட்டுச் சிறப்புகள் விளங்குகின்றன

**சிவ. சண்முகவடிவேல்**



தமிழ் ஆராயப்பெற்ற சங்கம் என்று ஒன்று இருந்ததில்லை என்பர் ஒரு சாரார். முச்சங்கம் இருந்ததற்குச் சான்றுகள் காட்டுவர் பிறிதொரு சாரார். ஔவைப் பிராட்டியார் விநாயகப்பெருமானிடத்தில் ''சங்கத் தமிழ் மூன்றுந் தா'' என்று வேண்டுதல் செய்வதும், . . . மெய்மைப் பொருளாந் தமிழ் நூலின் விளங்கு வாய்மைச் செம்மைப் பொருளுள் தருவார்திரு வால வாயிலெம் மைப் பவந்தீர்ப் பவர்சங்க மிருந்த தென்றால்'' என்று பெரிய புராணம் பேசுவதும் ''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழி தருமிக் கருளினோன் காண்'' என்னும் வாய்மை திறம்பா வாகீசர் வாய்மையும், இறையனார் அகப்பொருள் உரையும் இன்னும் இவை போன்ற நம்பிக்கைக்குப் பழுதுபடாச் செய்திகளும் முச்சங்கம் நிகழ்ந்த செய்தியில் நம்பிக்கையை வலுவடையச் செய்வன.

முச்சங்கம்

முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம்என்னும் முச்சங்கங்களில் முதற் சங்கம் ஏறத்தாழப் 10ஆயிரம்ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்திருக்கலாம் அல்லாமல் கி. பி. பின் அல்ல என்பதில் வலுவான நம்பிக்கையை ஊட்டுவது இறையனார் களவியல் உரை. முதற்சங்கத் தலைமைப் புலவராகத் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் விளங்கினார் என்றால் இடைச் சங்கத் தலைமைப்புலவராகக்குன்றம் எறிந்தகுமரவேள் அமர்ந்தார் என்ற உண்மைகளையும் களவியல்உரைகழறா நிற்கும்.

முதற் சங்க இடைச் சங்க கால நூல்கள் யாவும் கடல் கோள்களினாலும், பேரூழிப் பெருவெள்ளங்களினாலும் பூமிதேவிக்கு உணவாகி விட்டன. எஞ்சி இருப்பதுகடைச் சங்கச் சான்றோர்களுடைய கருவூலங்களே. அவற்றைப் பத்துப்பாட்டுஎட்டுத்தொகை என இரு பெரும் பிரிவுள் அடக்குவர். அவற்றுள்ளும் 'திருமுருகாற்றுப்படை' ஒன்றும் பரிபாடலில் சிலவும் தவிர ஏனைய யாவும் மக்கள் உள்ளக்கிடக்கைகளின் விருப்புவெறுப்புகளை, வாழ்க்கைக்கு வழிகாட்டலாக அமைய வேண்டியன, விலக்கத்தக்கனவற்றை அகம்-புறம் என்னும் இரு பிரிவாகப் பேணும் தகையன.

சமய நூல்களாக அவை அமையாததனால் தி- ஆண்டு பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் நாகரிகத்தில் சிவ வழிபாட்டின் உயர்வை வெளிக் கொணருவதற்கான தடயங்கள் இலவாயின.

கடைச்சங்க கால நூல்களில்

இருப்பினும் கடைச்சங்க கால இலக்கியத்தில் இடம் பெற்ற சொற்றொடர்களைக் கொண்டு சங்க காலத்தில் சிவ வழிபாடு இப்படி இருந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. நானில மக்களுடைய இன்பியல் வாழ்வை வெளிப்படுத்த வந்த பொய்யடிமை இல்லாத புலவர்கள் சிவவழிபாடு அக்காலத்தில் சீரும் சிறப்பும் உற்றிருக்காவிடில் முத்தமிழில் மொழிய முன்வரமாட்டார்கள் அன்றோ? 'கடவுள் பெயரிய கானம்' எனப்பதிற்றுப் பத்திலும் - (9) 'அவிர் சடை முனிவர் அங்கி வேட்டும், ஆவுதி நறும்புகை' எனப் பட்டினப் பாலையிலும் - (55)' 'ஆதி அந்தணன் அறிந்து பரிகொளுவ, வேதமாபூண் வையத்தேர் ஊர்ந்து, நாகம் நாரை மலைவில்லாக மூவகை ஆர்எயில் ஓர் அழல அம்பின் முனிய மாதிரம் அழல எய்து அமரர் வேள்விப் பாகம் உண்டபைங்கண்பார்ப்பான்' எனக் கலித்தொகையிலும் (5) பணியியர் அத்தை நின் குடையே முனிவர் முக்கண் செல்வர் நகர் வலம் செயற்கே எனப் புறநானூற்றிலும் (6) ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை, மாற்றரும் கணிச்சி மணிமிடற்றோனும் என 56ம், பாடலிலும், 'குன்றக் குறவன் கடவுட் பேணி, இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்' என ஐங்குறு நூற்றிலும் (253,) 'கணங்கெழு கடவுட்கு உயிர்ப்பலிதூஉய்ப் பரவினம் வருகம் சென்மோ தோழி' எனநற்றிணையிலும் (380) 'நீரும் நிலனும் தீயும் வளியும், மாக விசும்பொடு ஐந்துடன் இயற்றிய, மழுவாள் நெடியோன் தலைவனாக, என மதுரைக் காஞ்சியிலும், (453-55) பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும் எனச் சிலப்பதிகாரத்திலும், (5-169) 'நுதல் வழி நாட்டத்து இறையோன் முதலா, என மணி மேகலையிலும், (1-54) கொன்றை அலங்கல் அம்தெரியலான்' பிறங்கு நீர் சடைக் கரந்தான், 'ஏற்று ஊர்தியான், ' புதுத் திங்கட் கண்ணியான் என்று கற்றவர் ஏத்துங் கலியிலும் 'ஞாலம் நாறும் நலங்கெழு நல்லிசை நான் மறை முதுநூல் முக்கட் செல்வன், ஆல முற்றம் கவின் பெறத் தை இயன் பொய்கை சூழ்ந்த பொழி, மனை மகளிர் என அகநானூற்றிலும்- (181) 'ஆலமர் கடவுள் அன்னநின்செல்வம், வேல்கெழு குரிசில் கண்டேன்' எனப் புறநானூற்றிலும் (198) 'நீலநாகம் நல்கிய கலிங்கம், ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த எனச்சிறுபாணாற்றுப்படையிலும் (96/ 97) 'சூலம்பிடித்த சுடர்ப்படைக் காலக்கடவுள்' எனப் பதிற்றுப் பத்திலும், அருள் திறற்கடவுட் பழிச்சிய பின்றை, விருந்திற் பாணி கழிப்பிஎன மலைபடுகடாத்திலும் (534) வருவன கண்டும் கேட்டும் களிபேருவகை கொள்ளலாம். சிவவழிபாட்டின்அத்திபாரத்தைஓரோவழி அறிய முனையலாம்.

சிவவழிபாட்டின் ஆழம்

சிவபெருமானுடையநாமங்கள் சொற்களோடு சோர்ந்து விடாமல் அவை உணர்த்தும் பொருள் சிவ வழிபாட்டின் ஆழத்தைக் காணலாம். சிவ நாமம், அவருடைய திருவருட் செயல், அமர்விடம், அருள்பாலிப்பு, ஆடை, அணிகலன், தாங்கும் படை புரியும் கருணை யாவும் சுருங்கக் கூறிப் பெருக்க விளக்குவன

சங்க காலத்து மக்கள்வீரத்தில் நெஞ்சம்பறி கொடுத்தும் காதலில் களிப்புற்று நின்ற தோடமையாமல் அதற்கும் அப்பாலைக் கப்பாலை ஒன்று உண்டு, அது தான் உயிர்ப்பு என்னும் சத்தி, அது தான் உயிர் செல்லுங்கதி. அந்த உயிர் செல்லுங் கதிக்கும் உறுதி தேடினார்கள். அந்த உறுதி தான்பிறவாயாக்கைப் பெரியோனாகிய ஆலமர்கடவுள்முக்கட் செல்வனாகிய முருகவேள் தாதையின் திருவடிப்பற்று, அந்த ஆறாதசிவ அன்பை நாமும் பெறுமாறு பெற்று மறவாதமனத்தோடு உறுமாறுஉற்று உலகத்தோடு ஒட்டிஉறவாடுவோமாக.

# ஐ. தே. முன்னணிக்கு வாக்களிப்பவர்கள் சாதுரியம் மிக்கவர்கள்

## பாதுகாப்பமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல சந்தர்ப்பங்களில் ஒத்திவைக்கப்பட்டு இம் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது மக்கள் ஐக்கிய தேசிய முன்னணிச்கு வாக்களிப்பார்களேயானால் அவர்கள் சுயசிந்தனையுடனான சாதுரியமானவர்களே.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன எம்பிலிப்பிட்டியாவில் அண்மையில் நடைபெற்றபொதுக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கூறுகையில்,

பாராளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பாலானவை செயல் வடிவிற்கு கொண்டு வரப்பட்டிருப்பதை மக்கள் அனைவரும் அறிவர்.

அரசாங்கத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அபிவிருத்திக்காக பல திட்டங்களை முன்னெடுத்தும் செல்லப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## தினசரி தியானம்

### குடியிருத்தல்

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்.
- அப்பர்

நல்ல மனம் என்னும் வீட்டை நான் கட்டி வைத்திருக்கிறேன். நாதா, நீ நீங்காது அதனுள் குடியிருப்பாயாக.

ஒவ்வாத இருவர் ஒரே வீட்டில் குடியிருக்க முடியாது. மனம் என்னும் மனையில் யாண்டும் நலமே குடியிருப்பதாகுக. நல்ல எண்ணம், நல்லபேச்சு, நல்ல செயல்- இவைகளே அல்லும் பகலும் அதில் வாசம் செய்வனவாகுக. அத்தகைய இல்லத்தில் இன்பம் நிறைந்திருக்கும். கேடு என்னும் கீழோன் அவ்வீட்டினுள் நுழையான். கேடுடைய சிந்தையும், சொல்லும், செயலும் இல்லாத விடத்துத் துன்பம் இல்லை. பேரின்பமே ஆங்குப் பொலியும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (31)

**தவக்காலம் - நான்காம் வாரம் (ஊதா)**

**திபா 34:17-21,23. 'உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார்'**

கிறிஸ்தவ வாழ்வு சவாலாக இல்லையா? போராட்டங்கள் இல்லையா? எளிதாக இருக்கிறதா? சற்றே நில்லுங்கள்! இயேசுவை நாம்பின்பற்றவேண்டியவிதத்தில் பின்பற்றுகிறோமா? என்பதைத் தெளிவுபடுத்த இது முக்கிய தருணம்! உலகம் இயேசுவைப் பகைத்தது. அவரது வாழ்வு முறை சமூகத்தின் மனசாட்சியைத் தட்டி எழுப்பியது! உலகம் நம்மைப் பகைக்கவில்லை என்றால் சமூகத்தின் மனசாட்சியை நம் வாழ்க்கை முறை தட்டவில்லை! அப்படியானால் இயேசுவைப் பின்பற்றுவதை விடுத்து சமூகத்தின் நெளிவு சுழிவுகளுக்கு ஏற்ப நாம் நீந்தக் கற்று விட்டோம் என்பதுதானே பொருள்!

- காவலன்.



பலாலி படைத்தளத்தில் படையினர் முன்னிலையில் பிரதமர் ரணில் உரையாற்றுவதை, படத்தில் காணலாம்

போஷாக்கிற்கு
ஜீவாகாரம்

வளரும்
பிள்ளைகளுக்கு
பாலூட்டும்
தாய்மார்களுக்கும்
ஏற்ற சத்துணவு
உணவிற்கு தயார் நிலையில்
உள்ள ஒரு முழு உணவு

**நல்லை ...**

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தரிசனத்தை முடித்துக் கொண்டு நல்லை ஆதீனத்திற்குச் சென்று ஆதீன முதல்வரைச் சந்திப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரதமர். நல்லை ஆதீனத்திற்கு வரும் செய்தி கடந்த 12ந்• திகதி யாழ் மேலதிக அரசாங்க அதிபர் து: வைத்திலிங்கத்தால் நல்லை ஆதீன முதல்வருக்குத்தெரியப்படுத்தப்பட்டது.

இத் தகவலை அடுத்து நல்லை ஆதீன முதல்வர் பிரதமரை வரவேற்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

நேற்றைய தினம் பிரதமரின் வருகைக்காக நல்லை ஆதீனத்தில் மகர கும்பம் வைக்கப்பட்டிருந்தது. சிறுவர்கள் பூமாலைகளுடன் ஆதீன வாசலில் காத்து நின்றனர். நல்லை ஆதீனத்தின் ஆலோசகர் சபையினர் ஆதீன முறைப்படி பிரதமருக்கு வரவேற்பளிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தனர்.

எனினும் நல்லூருக்கு வந்து வழிபாடு செய்த பிரதமர் ரணில் ஆலயத்திற்கும் ஆதீனத்திற்கும் இடையில் உள்ள சுமார் 15யார் இடைவெளியில் ஆதீனத்திற்குச் செல்லாமல் அதனை விலத்தி சென்றார். இதனால் அவரை வரவேற்பதற்காக ஆதீன வாசலில் காத்து நின்றவர்கள் ஏமாற்றத்துடன் சென்றனர். இதேவேளை ஆதீனத்திற்கு பிரதமர் செல்வதை தடுத்தவர் முக்கிய அமைச்சர் ஒருவரென அங்கு பலராலும் பேசப்பட்டது.

ஈழத்துச் சைவ சமயத்தவர்களின் குருபீடமாக இருக்கின்ற நல்லை ஆதீனத்திற்குபிரதமர் செல்லாதது இந்து மதத்தை அவமதித்ததாகவே கருதப்படுகிறது. பிரதமரின் இச்செயல் இந்துக்களை வேதனைப்படுத்தியுள்ளதுடன் சைவ சமயம் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டு வருவதாகவும் இது குறித்து இந்து அமைப்புக்கள்தமது கண்டனத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் ஆதீனத்தில் கூடிநின்ற பலரும் பேசிக் கொண்டனர் (ந)

# மண்டைதீவு செல்ல படையினர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிக்கு செல்வதற்கு கடற்படையினர் விதித்திருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரிகள் வலம்புரிக்குத் தெரிவித்தனர். நேற்றைய தினம் வலம்புரி தனது ஆசிரியர் தலையங்கத்தில் மண்டைதீவு செல்வதற்கு விதிக்கப்பட்ட தடை குறித்து பிரஸ்தாபித்ததை அடுத்து மண்டைதீவைச் சேர்ந்தவர்கள் அங்கு செல்வதற்கு விதித்திருந்த தடை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக படை அதிகாரிகள் மேலும் அறிவித்துள்ளனர். (ந)

**யாழ் வந்த...**

கொண்ட பிரதமர் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் இருந்து உரையாற்றினார் அதனைத் தொடர்ந்து ரணில். அமைச்சர் திலக்மாரப்பன,அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனா, இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், யாழ் மாவட்ட எம்.பி ஆனந்தசங்கரி, கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ ஆகியோர் விமானப் படைக்குச் சொந்தமான ஹெலி மூலம் முகமாலைக்குச் சென்று ஏ-9 கண்டி வீதியினை பார்வையிட்டனர்.

அமைச்சர் குழுவினருடன் பிராந்திய, உள்நாட்டு, வெளி நாட்டு பத்திரிகையாளர்கள் 54பேர் விமானப்படைக்குச் சொந்தமான 6 ஹெலி மூலம் முகமாலைப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

முகமாலைப் பகுதியில் இடிந்த நிலையில் காணப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம், ஏ-9 கண்டி வீதியின் வரைபடம் ஆகியவற்றை பிரதமர் உன்னிப்பாக பார்வையிட்டார். முகமாலைப் பகுதியில் இருந்து பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் எம்.பிக்களும் பத்திரிகையாளர்களும் இராணுவ வாகனங்களில் வடமராட்சி நாகர் கோவிலுக்கு புதிதாக அமைக்கப்பட்ட பாதை ஊடாக நாகர் கோவில் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நாகர் கோவில் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமில் மதியபோசனம் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து ஹெலி மூலம் யாழ் மத்திய கல்லூரி மைதானத்திற்கு வந்த பிரதமரும் அவரது குழுவினரும் அங்கிருந்து கவச வாகனங்கள் சகிதம் யாழ் செயலகத்தைச் சென்றடைந்தனர். யாழ் செலகத்தில் நடைபெற்ற மாநாட்டைத் தொடர்ந்து நல்லூர்க் கந்தசுவாமி கோவில், ஆயர் இல்லம், நாக விகாரை, ஆகிய வற்றிற்கும் பிரதமரும் பிரமுகர்களும் விஜயம் செய்தனர். இன்று பிரதமர் வடமராட்சி, நயினாதீவு, காரைநகர்ஆகிய இடங்களுக்கு செல்வார் (வ)

**யாழ்-கண்டி...**

பல கஷ்டங்களையும் நட்டங்களையும் அடைந்துள்ளனர். இங்கு இடம்பெற்ற மோதல்கள் இயல்பு வாழ்க்கையைப் பாதித்து விட்டது.

யாழ் மக்களின் பல குறைபாடுகள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றினையும் உடனடியாகத் தீர்த்து வைக்க முடியாது. சில பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்திலும் சில பிரச்சினைகளை நீண்ட காலத்திலும் தீர்த்து வைக்கலாம்.

நான் யாழ்ப்பாணம் வரும் போது எந்தவிதமான தீர்வுத் திட்டத்தையும் என்னுடன் கொண்டு வரவில்லை உங்களுடைய தேவைகள் நிலைப்பாடுகளை அறிந்த பின்பே தீர்க்கமான தீர்வுத் திட்டத்தை நான் தயாரிக்க முடியும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்ட ஒரு மாதகாலத்தில் யாழ் கண்டி வீதி (ஏ-9) திறக்கப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் சில கடினமானவற்றை நாம் செய்து முடிக்க வேண்டியுள்ளது. அடுத்து வரும் மாதங்களில் நாம் அவதானமாக நடக்க வேண்டும். ஒப்பந்தத்தின் பிரகாரம் யாழ் கண்டி வீதி (ஏ-9) பாதையை சீக்கிரமாக திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பேன்.

நீண்ட கால யுத்தத்தினால் எமது திறைசேரி காலியாகியுள்ளது எனவே திறைசேரியை மட்டும் நம்பியிராது வெளிநாடுகளில் இருந்து நிதியைப் பெறும் வழிகளை கண்டு பிடிக்க வேண்டும்.

இங்கு எந்தத் திட்டத்தை அமுல் செய்வதாக இருந்தாலும் அதற்கு முதலில் நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும் அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட உடன்படிக்கையைப் பேணி வருவதில் அரச பாதுகாப்புப் படையினர் மிக அவதானமாக இருந்து வருகின்றனர். உடன்படிக்கையின் பிரகாரம் நாம் பல விடயங்களை 90 நாட்களுக்குள் செய்து முடிக்க வேண்டும் என்றும் பிரதமர் கூறினார். (வ)

மில்க்வைற்
கேட்டு வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
மில்க்வைற் சோப்
மில்க்வைற் சோப்
இன்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

**மாலை அணிய...**

ஏற்கவில்லை.

பிரதமருக்கு மாலை போட்டு வரவேற்பதற்காக, வந்திருந்தவர்கள் அனைவரும் அவருக்கு மாலை போடாமல் அவற்றைத் திருப்பிக் கொண்டுசென்றுள்ளனர்.

எளிய முறையில் மலர்ந்த முகத்துடன் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்ற போது மேல் அங்கியை கழற்றி விட்டு ஆலயத்தினுள் சென்று வழிபாடு செய்ததுடன் விசேட பூசையிலும் கலந்து கொண்டார். சிவஸ்ரீ மகா தேவக் குருக்களிடம் காளாஞ்சியும் பெற்றுக் கொண்டார். பிரதமரரை பார்ப்பதற்காக நல்லூரில் பொது மக்கள் திரண்டிருந்தனர்

**கண்காணிப்புக் குழுவிற்கு** (வ)

## ஓய்வு பெற்ற அதிபர் பஞ்சலிங்கம் நியமனம்

(கொழும்பு)

அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை கண்காணிப்பதற்கு அரச தரப்பில் 12பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணத்தில் இருந்து முன்னாள் இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம், முன்னாள் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் பிரான் விக்கிரமசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (வ)



பிரதமர் ரணில் தென்மராட்சியைப் பார்வையிடுவதை முதற்படத்திலும், யாழ் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்வதை 2வது படத்திலும் காணலாம்

இளவாலை - யாழ் திருமறைக்கலாமன்றம்
இணைந்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை
கல்லூரி யாகம்
(இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி)
இடம்:- இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானம்
காலம்:- 16.03.2002 சனிக்கிழமை (நாளை) 7.30 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திருமறைக்கலாமன்றம்
இளவாலை
[C/3710]



3 லட்சம் இருக்கிறதா?
ஆமெனின்
ஒரு வீடு தயார்
கூலி 85,000 ரூபாவில் இருந்து
சீமெந்து 475 ரூபாவில் இருந்து
லக்சுமி கொம்யூனிக்கேசன்
கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில். T.P:-3621
[4829]